T03945
R001J01

# குரு பர வணக்கம்

38

தஞ்சாவூர்.

3945

ஆனத்தூர். கே. வேங்கடராமன்

# ஒரு சிறந்த துணை

ழ்வெனும் கடலில் வருந்தி அயரும்
ரும் இன்பக் கரை சேர அவாவுறுவது
மை. ஆனல் தக்க வழித்துணையோ பற்
ாடோ கிடைக்க வேண்டுமே, ஆடம்பர
டலகில் அது கிடைப்பது அரிதாயுள்
ண்ணற்ற நூல்கள் எதை எதையோ
னும், வாழ்க்கையிற் கலந்து, நடை
யை வகுத்து, ஐய முற்ற இடத்துத்
வு படுத்தி, இடருற்ற இடத்து உறுதுணை
நின்று காத்து, அருட்பேறளிக்க வல்ல
செந்நெறி எந்நூலில் உளதோ என ஆவலுடன்
எதிர்பார்க்கும் ஆன்ம நேயர்களுக்கு உண்
மையில் திருப்தியளிக்க வல்லது

"வழிகாட்டும் வான்பொருள்"

னும் செந்தமிழ் நூலாகும்.

இதனை வரைந்துதவிய ஆசிரியர்:—செந்
மிழ் விளக்க வள்ளலார் திரு. கீ. இராமலிங்க
தலியார் எம். ஏ., அவர்களாவர்.

இந்நூலின் விலை ரூபா 3.

விவரங்கட்கு:

**ஆ. நரசிம்மலு,**

ர், இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கம்,

காஞ்சிபுரம்.

# ரு பர வணக்கம்

த. க. மலர். 11. படிகள்: 1000.

திருச்சாத்தனூரில்
20—9—1948ல் நடைபெற்ற
அருட்கொடி விழாவில் வெளியிடப்பெற்றது.

★

கிடைக்குமிடம்:

**அருள்சக்தி விலாசம்,**

பிள்ளையார் குப்பம்,

மஞ்சகுப்பம் தபால், : : கடலூர். என். டி.

★

மேல்லட்டைப் படி 0—12—0
வல்லட்டைப் படி 1— 0—0

Published by D. K. A. V. M. Sabha, Coimbatore.

# அணிந்துரை.

'குருபர வணக்கம்' அருள் இரந்து வேண்டும் அன்பு வெள்ளம். பண்களிக்கப் பாடுவதற்குப் பாங்கான பாடல்கள். உள்ளத்தை உருக்கி வரைந்த முறையீட்டு ஓவியங்கள். உயிரை உடையவனுக்கு ஆளாக்கும் சிந்தனைச் சிற்பங்கள். ஆண்டவன் அருளில் ஆழ்த்தி அக மகிழ்விக்கும் அழகு அழகான சொற்பூஞ் செடிகள்.

முதல் பகுதி திரு. இரெட்டியப்பட்டி அடிகளாரைப் பற்றியது. 1922-ம் ஆண்டுவரை நமது ஊனக்கண்களிக்கத் திருமேனி பூண்டு அருள்பாலித்துவந்த ஆண்டவரே அவ்வடிகளாராவார்கள். இன்றும் தோன்றாத்துணையாய், வழிகாட்டும் வான்பொருளாக விளங்கி, அன்பின் அடியவர்களை அருள் ஆட்சி செய்துவரும் பேரருள்பிழம்பு ஆகின்றார்கள். அவ் அருந்தகைப் பெரும்பொருளால் ஆட்கொள்ளப்பெற்ற சிறப்பும், அப்பெருந்தகையின் அருட்பாங்கும், குருவணக்கம் பகுதியில் மிளிர்கின்றன.

பர வணக்கம் பகுதி எங்கும் நிறைந்து இலங்கும் எல்லாம்வல்ல இறைவனைப்பற்றியது. இறைவனே உருவத்திருமேனிகொண்டு உலகில் குருபரனாக வருகின்றார். அவ்வுருவங்கடந்த பெருநிலையினை, சிந்தைசென்ற மட்டும் இனிக்க இனிக்க உன்னுவதே இப்பகுதியின் பான்மை.

இரு பகுதிகளும் சொல்லாலும், பொருளாலும் மிக்க ஒழுங்கான ஒள்ளிய முறையில் அமைந்துள்ளன. பரமாசிரியரைத் 'திருப்பள்ளியெழுச்சி'யால் பள்ளியெழப் பண்ணி, 'அர்ச்சனை'யால் பணிவுமலர் தூவி, 'தோத்திரங்க'ளால் வாயாரவாழ்த்தி, 'குரு சொருப'த்தால் திருமேனிப்பாங்கைத் தித்திக்கப்பாடி, 'குருநாத'ரால் ஆண்டவன் என அகங்குளிர உணர்ந்து, 'கண்ணிக'ளால்

முறையிட்டு, இவ்வாறான செய்கைகளால் குருபரனார் அலுப்புற்று விடலாகாதே என்ற பேதைநெஞ்சால் அலுப்பாற்றும் வகையால் 'லாலி' பாடி 'கண்வளர'ச் சொல்லி, 'ஊஞ்சல்' ஆட்டி, ஒருவரை விட்டுப் பிரியும் போது "என்னை மறந்து விடாதீர்கள்!" என்று சொல் லும் இயற்கைக்கு இசைய, அடியேனை மறந்திடலாகாது என 'எச்சரிக்கை' செய்து, மங்களம் எங்கும் நிறையட்டும் என 'மங்களம்'பாடி முடிப்பதே குருவணக்கம் குழுகோடு செல்லும் முறையாகும்.

பாடல்கள் தெள்ளிய நீரோடையின் உள்ளம் அள் ளும் ஓட்டத்தைப் போலவும், தேன் அருவி பாய்தல் போலவும், இன்பம் அளிக்கும் பண்புடையனவாய் இருப் பதோடு, உயிரெழுத்துக்களை பாடல் முதல் எழுத்துக் களாகக் கொண்ட 'உயிர் வர்க்க மாலை' களாகவும், விண் மீன்கள் 27 ஆக இருப்பதற்கு ஒப்ப, உயிர் பன்னிரண்டு மெய்முதல் பதினைந்து ஆக 27 எழுத்துக்களை முறையே முன்னே பூண்ட 'அட்சர நட்சத்திரமாலை' யாகவும், முதலில் 'அ' எழுத்துக்கு அடுத்து மெய் யெழுத்துப் பதினெட்டும் முறையாக வருகின்ற 'அகரம் அடுத்த மெய் வரிசை'யாகவும், க, கா, கி கீ முதலிய பன்னிரண்டும் பாட்டின் முதல் எழுத்தாகவரும் 'ககரவரிசை'யாகவும், அ, உ, ம-மூன்றும் கூடியே 'ஓம்' ஆகின்ற தென்பதை விளக்க இந்நான்கும் முறையே முதலில் அமைந்த பாடல்களாக வும், முதல் எழுத்துக்களை யெல்லாம் ஒன்று சேர்த்துப் படித்தால் பூரண ஞான குரு தேவா வா!' என்று வரும்படி அமைந்த பாடலாகவும், ஒன்று, இரண்டு முதலிய எண் கள் பத்துவரை வரிசையாக வருமாறு 'எண்வரிசை'ப பாக்களாகவும், உயிர்க் குற்றெழுத்துக்கள் ஐந்தும் முன்னே வரத் தொடுத்த 'உயிர்க்குறில் தொடை' யாக வும், அ. இ. உ-என்ற சுட்டெழுத்து மூன்றும பாட்டைச்

சுட்டும் முதலெழுத்தாக அமையும் 'சுட்டெழுத்தணி' யாகவும், மேல் நாட்டு இசைமுறை பற்றிய இங்கிலிஷ் நோட்டுக்கள், கருநாடக இசைக்குப் பொருத்தமான கீர்த்தனைகள், பண்டைப் பெருமையுடைய தேவாரப் பண், பாடற்கு மிக அரிய கட்டளைக்கலித்துறை, எளிதில் உளப்பதியும் கண்ணிகள் முதலிய பாவகைகள் கூடிய பாமாலைகளாகவும் இக் குருபர வணக்கம் அமைந்திருப்பது அகங்குளிரப் போற்றற்குரிய பான்மையதாகின்றது.

இப்பாடற்கினிய வழிபாட்டு அன்பொழுக்கைப்பாடியிந்த பேரன்பினர் உயர்திரு. பாலகவி. ஆனத்தூர் கே. வேங்கடராமன் அவர்கள் ஆவர். இவர்கள் தமது பதின்மூன்ருவது வயது. முதலே இனிய தமிழ்ப்பாடல் பாடத் துவங்கினமையின் இவர்களை 'பாலகவி' என்று அறிஞர்கள் அழைக்கலாயினர். இவர்களது தாய்மொழி தெலுங்கு. தெலுங்கும் தமிழும் ஓரின மொழிகளாயினும் தெலுங்கர் ஒருவர் தேன் தமிழ் மணக்கும் பாடல்கள் இளமை தொட்டே பாடுவதென்பது திருவருள் செயலே யென்னல் வேண்டும். தமிழ் இலக்கணம், இலக்கியம் ஏதும் படிக்க வாய்ப்பு பெருத நிலையில் பாலகவியவர்கள் பண்புமிக்க பாடல் புனைகிருர்கள் என்ருல் வேறு எப்படி அதற்கு ஏது சொல்லமுடியும்? அவர்கள் உள்ளம் ஆண்டவனிடத்தில் அன்புகனிந்த உள்ளம். அவர்கள் இயல்பு இனிமை சான்ற தனிமை இயல்பு. அவர்களைப் போல் பலரைப் பார்ப்பது அரிது. இயற்கை வயப்பட்ட அவர் உள்ளத்தினின்றும் உருகி ஊற்றெடுத்து வந்த இக் 'குருபர வணக்கம்' அன்புள்ளம் கொண்ட அனைவர்க்கும், தமிழ்ச் சுவை யறிந்த யாவர்க்கும் பெரும் பயன் விளைக்கும் என்பது திண்ணம்.

திண்டுக்கல், }
24-8-1948 }

**தீ. இராமலிங்கன்.**

# ஆக்கியோன் குறிப்பு

திருவருட்செல்வர்காள்! **அன்பு வணக்கம்.**

குருபரனாரின் அருட்பெருங்கடலுள் ஒரு சிறு திவலை அடிமையின் உளத்தே புகுந்து இச்சிறு நூலை வரையச் செய்தது என எண்ணுகின்றேன்.

இதற்கோர் அழகிய அணிந்துரை இருப்பின் சிறப்பாயிருக்குமேஎனத்தோன்றிற்று. "வழிகாட்டும் வான் பொருள்" என்னும் அருள் நிறை நூலை அவனிக் களித்த அண்ணலாரும், திண்டுக்கல் நகராட்சி ஆணையாளருமான செந்தமிழ் விளக்கவள்ளலார் உயர்திரு. கி. இராமலிங்க முதலியார் எம். ஏ., அவர்கள் அவ் அவாவை முற்று வித்தனர். அவர்கட்கு என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன.

இதனை அச்சிட ஊக்கிய ஸ்ரீலஸ்ரீ அருள் சக்தி அன்னையார் அவர்கட்கும், வெளியிட ஒப்பிய கோவை த. க. ஆ. வை. மகாசபையினர்க்கும், முன்பணம் கொடுத்துதவிய காஞ்சிபுரம் ஆடை வாணிபர் உயர்திரு. தி. க. ஆ. குமாரசாமி முதலியார் அவர்கட்கும், குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுதவிய காஞ்சிபுரம் ஸ்ரீ நிலயம் அச்சகத்தினர்க்கும் என் அன்பார்ந்த நன்றி உரியது. இந்நூல் திருச்சாத்தனூரில் அருட்கொடி விழாவில் வெளியிடப்பெறல் மகிழ்தற்குரியதாகும்.

அன்பர் பலரும் பெற்றுப் படித்துப் பயனுற்று, அவ்வுயர் அருட்பேற்றை அடியேனும் பெற்றுய்யுமாறு ஆசிகூற வேண்டுமென்பதே அடிமையின் பணிவார்ந்த விண்ணப்பம்.

இங்ஙன்,

**ஆனத்தூர். கே வேங்கடராமன்.**

# குரு வணக்கம்



இரெட்டியப்பட்டி சுவாமிகள்

இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

# குருநாதர்

குருநாதா! குருநாதா!! குருநாதா!!!

**அன்பு வணக்கம்.**

உன்னைச் சிறிதுநேரம் துதிக்க வேண்டுமென்று உனது அருளாணையால் அடியேனுடைய இதயத்தே தோன்றிய ஓர் குறிப்பின் காரணமாக இதனை எழுதத் தொடங்குகின்றேன். இதற்கேற்ற அளவு அறிவாற்றல் களைக் கொடுத்தருளவேண்டுமென உன் திருவருளை நாடி இறைஞ்சுகின்றேன்.

உலகம் இன்பமயமானதெனப் பலர்கூறுகின்றனர். ஆனால் எல்லாமக்களும் இவ்வுலக சுகபோகங்களிற் சிக்குண்டு துன்பப்படுவதையே பெரும்பாலும் காண வேண்டியுள்ளது. உன்னைப்போன்ற மகான்களெல்லாம் இவ்வுலகை இன்பவடிவாக, இன்பமயமான இறைவன் வடிவாகக்கண்டு, பேரின்ப மனுபவித்து, தாம் பெற்ற இன்பம் வையமெலாம் பெறட்டும் என்று அறைகூவி யழைத்தனர்.

அத்திரி மரீசி கௌதமர் யாஞ்ஞவல்க்யர் வசிட்டர் நாரதர் முதலிய இருடிகளும், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய சமய குரவர்களும், மெய்கண்டார், அருள்நந்தியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய சந்தான குரவர்களும் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகரர், திருமங்கைமன்னன், தொண்டரடிப் பொடியார், திருமழிசையார், மதுரகவி, பொய்கையார், பூதத்தார்,பேயார், சடகோபர், திருப்பாணாழ்வார் ஆகிய பன்னிரு ஆழ்வார்களும், கௌதமபுத்தரும், இயேசுநாதரும், நபிநாயகமும், திருமூலரும், ஔவையும், கபிலரும், வள்ளுவரும், அருணகிரியாரும், தாயுமானரும், இராமலிங்க அடிகளும் இன்னும் எண்ணிறந்த மகான்களும் இத்தூய திருத்தொண்டைப் புரிந்தனர்.

மகான்கள்செய்த பெருங்காரியம் துன்பத்தைமாற்றி இன்பமயமாக்கியதே. துன்பம் என்பது எங்கே இருக்கிறது?—எண்ணத்தில். எண்ணம் எங்கு உதிக்கிறது?—மனதில். மனம் ஏது?—மனமே மாயை. மாயை என்பது என்ன?—இருள். அவ்விருள் எப்படிவந்தடைந்தது?—அஞ்ஞானத்தால். ஆகையால் அஞ்ஞானம் நீங்கிவிட்டால் இன்பம் உதயமாகிறது. இதெல்லாம் ஏட்டில் உள்ளன படிக்கலாம். பேசலாம். நடைமுறையில் ஆக வேண்டுமே! அதற்குத்தான் ''குரு'' தேவை. 'கு' என்ருல் அஞ்ஞானம்; ''ரு'' என்ருல் ஒழிப்பவர். ஆகவே 'குரு' என்ருல்அஞ்ஞானத்தை ஒழிப்பவர் என்று தெரிகிறது.

ஆனுல் இந்தக்காரியம் சாதாரண மக்களால் செய்யக்கூடியதா?—அல்ல. எல்லாரிடத்திலும் இந்தச்சக்தியிருந்தாலும் அனுபவத்தில் பழுத்த நின்போன்ருருக்கே இக்காரியம் சாத்தியமாகும்.

ஆ! என்ன கருணை!' என்ன கருணை!! உலக மக்கள் உய்யும் வழி தெரியாது துன்புறுவதைக் கண்டு என்ன அற்புதமான சட்டம் வகுத்தளித்தாய்! இறைவன் அருளை எல்லோருக்கும் எளிதே மடுத்துத்தர எவ்வளவு அற்புதமான திட்டம் வகுத்தாய்! என்ன அருமையான கட்டு திட்டங்களை அமைத்துள்ளாய்! நினது சட்டத்தை உறுதியுடன் நம்பிக் கடைப்பிடிக்கும் மெய்யன்பர்கட்கு எவ்வளவு விரைவில் அருள் புரிகிருய்! நின் கருணையே கருணை!

உலகமக்கள் யாவரும் உய்யட்டும் என்றுதான் நீ மிக எளியமுறையில் சட்டம் வகுத்தாய். சட்டம் கடுமை என்று தோன்றினுலும் கைக்கொண்டுவிட்டால்எவ்வித இடையூறுமின்றி மிக எளிமையாக அனுட்டிக்கும் ஆற்றலையும் அருளுகின்ருய். எத்தனையோ ஊர்களுக்குச் சென்று சென்று நல்வழி யுணர்த்தினுய்; எத்தனையோ அடியார்குழாங்களின் மூலமாகவும் உணர்த்தி வருகிருய். மக்கள் யாவரும் கைப்பற்றி விட்டார்களா? இல்லை.

ஏன்? நினது திருவருள் மனிதனை நாடிச்சென்று உய்விக்க எண்ணுகிறது; ஆனால் மனிதனின் தீவினை விலக்கிக்கொண்டு செல்கிறது. என் செய்யலாம்? இறைவன் திருவுளம் இவ்வாறு போலும்! இனிவரும் புதுயுகத்தில் எங்கு காணினும் நின்சட்டத்தை அனுட்டிக்கும் அன்பர் மயமாகவே காணலாம் என்பது நினது அருளால் அன்பர்கள் கொள்ளும் நம்பிக்கை.

இது சிறுவயதிலிருந்து கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தது. பள்ளிப்படிப்பானதும இரண்டொரு புராணம் படித்தது. அருட்பா படிக்க ஆரம்பித்தது. இராமலிங்கரிடம அன்புகொண்டது. இதற்குள் குடும்ப பாரம் பெரிதாயிற்று. விடுதலை உண்டா? என ஏங்கியது. கைவல்யம் படிக்க அவாவியது. ஏட்டுக்கல்வியில்என்ன லாபம்? எந்த முறையில் நடந்துகொள்வது எனத் தெரியாமல் திகைத்துத் தடுமாறியது. தெய்வாதீனமாய் அருணை அடையவும், பல பெரியாரைச் சந்திக்கவும், சேலம் செல்லவும், கோவை சேரவும் சந்தர்ப்பங்கள் வாய்த்தன.

முத்துசாமி என்பவரின் நட்பு கிடைத்தது. அவர் மூலமாக நின் அருட்சட்டத்தை ஏற்குமாறு செய்வித்தாய். இது சரிவர சட்டப்படி நடப்பதில்லை. வேளையில் எழுந்து நீராடுவதே சிரமம். ஆயினும் இதன்பால் நீ அளவுகடந்த அன்புபூண்டு, உன்பிள்ளை என்றெண்ணி, இதுசெய்யும பிழைகளை மன்னித்துப் பாதுகாத்து வருகிறாய். என்ன அன்பு! என்ன அன்பு!! உன் அன்பிற்கு யாது கைம்மாறு புரிய இதனால் இயலும்? நீ யாரிடத்தில் என்ன கைம்மாறு எதிர்பார்க்கிறாய்?

நின் சட்டத்தைச் சரிவர அனுட்டித்து உய்ந்தால் அதுவே நினக்குச்செய்யும் கைம்மாறு. அச்சக்தியையும் நீதானே தரவேண்டும்? இயற்கையை அடக்கியாளும் சக்தி நினக்குண்டு. எந்தச் சக்தியும் வழங்க நின்னால் இயலும்.

நின்போன்ற மகான்களின் சக்திதான் உலகையே ரட்சிக்கிறது. அந்தச் சக்தியினால்தான் பாரத நாடு தொன்றுதொட்டு உலகில் சிறந்தஒளியுடன் திகழ்கிறது. அந்தச் சக்தியின்றேல் உலகில் மழையேது? வளமேது? வாழ்வேது? "நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பது ஔவை வாக் கல்லவா?

உலகம் ஓர் வயல்;
மகான்கள் அதன் விளைவு.
உலகம் ஓர் மரம்;
மகான்கள் அதன் கனிகள்.
உலகம் ஓர் மலர்;
மகான்கள் அதன் மணம்.
உலகம் ஓர் கோயில்;
மகான்கள் அதனுள் ஒளிரும் மூர்த்திகள்.
உலகம் ஓர் நதி;
மகான்கள் அதன் நீரோட்டம்.
உலகம் ஓர் மேகம்;
மகான்கள் அதன் மழைநீர்.
உலகம் ஓர் மணி;
மகான்கள் அதன் ஓசை.
உலகம் ஓர் மாணிக்கம்;
மகான்கள் அதன் பேரொளி.
உலகம் ஓர் வீணை;
மகான்கள் அதன் தந்திகள்.
உலகம் ஓர் பாடல்;
மகான்கள் அதன் இசை.
உலகம் ஓர் வேதம்;
மகான்கள் அதன் உட்பொருள்.
உலகம் ஓர் பாற்கடல்;
மகான்கள் அதிலெழும் அமுதம்

உலகம் ஓர் கதிரவன்;
மகான்கள் அக்கதிரவனின் கிரணங்கள்.
உலகம் ஓர் உடல்;
மகான்கள் அதன் உயிர்.

ஆதலால் மகான்களின் செயல்கள் இறைவன் செயல்களே. மகான்களின் செயல்கள், சொற்கள்,எண்ணங்கள் யாவும் உலக நன்மையை நாடுவனவாகவே யிருக்கும். உத்தம மகான்களின் ஒவ்வோர் சுவாசமும் உலகைக் காத்து ரட்சிக்கக்கூடிய சக்தி வாய்ந்தன. ஆ! மகான்களின் மகிமையே மகிமை! மகான்களை வழிபட்டாலே ஆண்டவனை வழிபட்டதாகும். மகான்களின் அன்பைப் பெற்றாலே ஆண்டவன் அருளைப் பெற்றதாகும். திருமூலர் முதலிய பெரியார் இதனை நன்கு வலியுறுத்தினர். இதில் சந்தேகம் ஒன்றும் கொள்ளவேண்டிய காரணம் இல்லை. இப்போது உன்னுடைய அன்பர்களை விசாரித்தாலே உண்மை புலப்படு மல்லவா?

ஒருவருக்குத் தாயும் தந்தையும் தெய்வமும் பிறவும் குருவே என்பர் ஆன்றோர். இதுவும் அப்படித்தான் நம்பியுள்ளது. நம்பினவரை என்றும் காப்பதே மகான்களின் விசேட குணம். நின்பால் அப்பெருங் கருணை ஏராளமாகத்தான் உள்ளது. ஆனால் ஒரே ஒரு விஷயம். இது உண்மையான அன்பு பூண்டு நீ சொன்ன சட்டத்தில் ஓர் அணுமாத்திரமும் பிசகாமல் நடந்துகொள்ள வேண்டுமே! அதுதான் செய்வதில்லை நீயும் சிலநாள் பார்க்கிறாய்; கருணை தோன்றுகிறது; ஒரு சோதனை தருகிறாய். அச்சமயம் இது என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடுகிறது. அப்போது நீ “இனிமேல் சரியாய் நடக்கிறாயா? ஆண்டவன் அருளை உறுதியாய்ப் பிடிக்கிறாயா? உனக்குத் துன்பம் பொறுக்க முடியவில்லையா? ‘மந்திரமாவது நீறு’ என்ற ஞானசம்பந்தரின் திருநீற்றுப்பதிகம் நினைவு வருகிறதா? இதோ, எங்கும் நிறைந்த கருணைக்கடலின் பேரருள்; அஞ்சாதே; இந்தா, திருநீறும் தீர்த்தமும்; பெற்று, துன்பத்தினின்றும் மீண்டு, இறையடியில் இதயத்தை இருத்து” என்கிறாய்.

"ஆகட்டும் ஐயனே! அப்படியே செய்கிறேன்; முதலில் இந்தத் துன்பம் தீர அருள் செய்" என்கிறது இது. "அப்படியே" என்கிறாய் நீ.

சோதனை விலகிற்று. துன்பம்சற்று நீங்கிற்று. இது பின்பு என்ன செய்கிறது? 'பழைய கந்தனே கந்தன்' என்றபடி அசிரத்தைகொண்டுவிடுகிறது. பிறகு நீ பார்க்கிறாய். "என்ன தம்பி! உனக்கு எவ்வளவு சொன்னாலும் மறந்துவிடுகிறாயே! இப்படி மறக்கலாமா? இப்போது மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்துகிறேன்; இனிமேலாவது மறவாமலிரு! உன் சுகத்தை நாடித்தானே சொல்லுகிறேன்" என்று மற்றொரு சோதனையைத் தருகிறாய். அத்தருணத்தும துன்பம் பொறுக்கமுடியாமல் வருந்தி, முன்போலவே கெஞ்சுகிறது இது. அப்போதும காத்து ரட்சிக்கின்றாய்.

நீ அன்பர்களுக்குத் தரும்சோதனையெல்லாம் அவர்கள் மனத்தை நல்வழிப்படுத்துவதற்கேயாகும். ஆனால் அதைத்தாங்க இதற்குச் சக்தியில்லையே. நீ காக்க முன்வராவிட்டால் என்னகதியாய்விடும்! ஆ! எத்தனை கோடி அன்னையர்களானாலும், எத்தனை கோடி தந்தையர்களானாலும், உன்போல் காக்கவல்லாரா? நீயே தாய். நீயே தந்தை. நீயே உறவு. நீயே நட்பு. நீயே செல்வம் நீயே வருவாய் நீயே பெருநிதி. நீயே வாழ்வு. நீயே கண். நீயே கண்மணி. நீயே அன்பு நீயே அறிவு நீயே அருட்கடல். நீயே அனைத்தும். உன்னை யடைந்தோர்க்கு எதுவும கிட்டும்.

எப்படியோ இதனிடம் உனக்குக் கருணை பிறந்து சட்டத்தில் ஈர்த்துக்கொண்டாய். அன்பில்லாவிடினும் அன்பர் குழாத்துள் கலக்கச்செய்துவிட்டாய். குருவின் அன்புக்குப் பாத்திரரானோர் எவ்விதத்தும் உய்வர் என்பார்கள். ஆதலால் இது உய்யும் விதத்தை விரைவில் வழங்கியருள்க. சோதனைகள் அதிகமாய்ச்செய்ய வேண்டுமா? வேண்டாம். பொறுக்கும சக்தி யிதற்கில்லை. நீதான் அருளவேண்டும். ஆதலால் விரைவில் பக்குவி

யாக்கு. மெய்த்திண்மை தா. நிட்டையில் அமர்த்து. உண்மையை உணர்த்து. செம்பொருளைக்கண்டு அனுபவிக்கும் உயர்நிலையை வழங்கு. உனக்கிது பெருங்காரியமல்ல. உன் அருட் கிரணத்தில் ஓர் அணுமாத்திரம் அனுப்பினுல் இக்காரியம் நிறைவேறிவிடும். ஆதலால், தயவுசெய். ஆண்டுகொண்டாய்; அருள்நிலை உணர்த்து. பேரின்ப அமுதத்தை அருந்தச்செய். அருட்பணியில் ஈடுபடுத்து. 'இங்கு சென்று இனாது செய்' எனப்பணி. அதுதான் இதன் பிரார்த்தனை.

இதன் மனம் தூய்மையுறச் செய். பொதுஜன நன்மையையே புரியும் எண்ணமும் சொல்லும் செயலும் வழங்கு எல்லாவுயிரும் இறைவனுலயமாய் இனிதுகண்டிறைஞ்சும இயல்பினைத் தா. இவ்வேழையின் பிரார்த்தனையையும் ஏற்றருள்! நிறைவேற்றியருள்! திருவருள் வழங்கு; விரைவில் வழங்கியருள்வாய் என்றே இது பரிபூரணமாய் நம்புகின்றது.

ஏனென்ருல், மகான்கள் வாசம் செய்த இடத்தும், மகான்கள் திருவடி தீண்டப்பெற்ற இடத்தும், மகான்களின் பரிசம் உற்ற இடத்தும், மகான்களின் திருக்கண் ணேக்கம் பட்ட இடத்தும் அவர்களுடைய தபோமகிமையின் அம்சம்பட்டு, அந்த இடங்கள் புனிதமடைகின்றன என்றும், மகான்கள் அமர்ந்திருந்த இடத்தில் பூமியில் சில முழ ஆழம் அவர்களின் யோக சக்தி பதியும் என்றும், அநேக மகான்களின் வருகையைப் பெற்றுள்ளமையாலேயே பல புண்ய தீர்த்தங்களும், பல புண்ய க்ஷேத்திரங்களும் சிறந்த மகிமை பெற்று விளங்குகின்றன என்றும் பெரியோர் கூறுவர். உத்தம மகாஞகிய நீ இதன் உள்ளத்தை ஓர் உறைவிடமாகக் கொண்டுள்ளமை இது பூர்வம்செய்த புண்ய விசேடமே. நின்அருள் பரிசம்பட்ட உள்ளம் தூய்மை பெறுவதில் ஐயமேது? ஆதலால் இதன் பிரார்த்தனையும் நின் திருவருளால் நிறைவேறுமென்பதே நம்பிக்கை. நிறைவேற்றும் சக்தி நின்பால் உளது. அவசியம் விரைவில் நிறைவேற்றி யருள்.

ஓம் சற்குரு.

# திருப் பள்ளி யெழுச்சி.

(உயிர் வர்க்க மாலை)

---

அருளறி வாகியெங் கணுநிறைந் தருள்செய்
அற்புதப் பொருளருள் துணையென வுணர்ந்தே
இருளகன் றிடவுல கினிலெலா வுயிரும்
இன்பமெய் தற்கெனத் திருநெறி வகுத்துப்
பொருளனைத் தினுமுயர் செம்பொரு ளளிக்கும்
புனிதனே மனிதனாய் இனிதுவந் தவனே
மருளறு மனத்தமர்ந் தாட்சிசெய் தருளும்
மன்னவ னேபள்ளி யெழுந்தரு ளாயே.

ஆணவ கன்மமா யாமலம் மூன்றும்
அடியொடு தொலைந்திடச் செய்யவல் லவனே
வீணல சங்கமும் கோழியு மொலித்தல்
விடிந்தது பொழுதருட் கதிரவன் வரவு
காணவென் றேமலர் கிறதுளக் கமலம்
காரிருள் மாயையாம் திரையகல் கிறதே
பேணிநல் லருள்புரிந் தெனையுமாட் கொண்ட
பெருந்தகை யேபள்ளி யெழுந்தரு ளாயே.

இனிமையாம் தமிழையோ தாதுணர்ந் தருளால்
எண்ணிலாப் பாடல்கள் கூறருட் புலவா
தனிமையும் மோனமும் மேவியே பொதிகைத்
தண்வரைக் குகையினில் அமர்ந்தமே லவனே
பனிமலர் கொண்டுநின் பக்தர்கள் பலரும்
பரவிட முன்றிலிற் காத்திருக் கின்றார்
இனுமெனக் கருள்செயத் தாமதம் வேண்டா
என்குரு வேபள்ளி யெழுந்தரு ளாயே.

ஈரமில் லாமனத் தினர்பால் மருவா
தென்றுமெய் யன்பர்பால் எய்திடச் செய்தாய்
ஆரமும் மலரும்நீ ருங்கொடே பூசை
ஆற்றியைம் புலனையும் வென்றுநிற் பதுவே
வீரமென் றுலகுக் குணர்த்தினை ஞான
வித்தகா சுத்தசாத் வீகமாம் சொருபா
சேருமென் பவஇமனும் மலைதுகள் செயவே
சீரிய னேபள்ளி யெழுந்தரு ளாயே.

உத்தம வாழ்வையிவ் வுலகிலெல் லோரும்
உண்மையில் நடத்திடற் கானநன் னெறியை
சுத்தம னத்துடன் தந்தருள் புரிவோய்
துரியநல் வெளியினில் சோதியைக் கண்டே
நித்தமும் சச்சிதா னந்தவிண் ணமுதை
நிட்டையி லிருந்தருந் திடுமகா யோகி
இத்தரு ணத்தினில் எனக்கருள் புரிய
என்குரு வேபள்ளி யெழுந்தரு ளாயே.

ஊசலிற் கயிறுகள் அறுந்துவீழ் பலகை
ஓரிடத் தசைவுறு தமைவதைப் போன்றே
மாசுறு வினைக்கயி றறுந்து மோனத்தில்
மன்னிய முனிவனே ஞானமா மழுவால்
ஆசையெ னும்விருட் சத்தினை யழித்தே
ஆணவக் காட்டையும் அழிக்கும் மேலவனே
தேசுறு திருவருட் கொடியினை நிறுவும்
தேசிக னேபள்ளி யெழுந்தரு ளாயே

எண்ணமும் சொற்களும் செய்கையும் தூய்மை
எய்தியே திகழுதல் வேண்டுமென் றினிதே
புண்ணிய மிக்கமெய் யன்பரைத் தேடிப்
புனிதநன் மொழிகளால் அருள்நெறி யுரைக்கும்
திண்ணிய மோனியே ஞானியே பொழுதும்
திவ்யமாய்ப் புலர்ந்தது வினையிருள் நீங்க
உண்ணெகி ழுணர்வினால் உண்மையை யுணர
உவந்தரு ளப்பள்ளி யெழுந்தரு ளாயே.

ஏதுவும் யுக்தியும் உரையும்யோ சனையும்
இனிய ஆராய்ச்சியெல் லாங்கடந் திலகும்
நாதனைப் போதனைத் தீதிலா நெறியால்
நாடுகென் றுலகினர்க் கன்பொடு நவின்றோய்
சூதுவஞ் சனையிருள் தொலைந்ததின் னருளாம்
சூரியன் உதயவெற் பணுகினன் காணாய்
ஏதுவந் தாலும்அஞ் சேல்எனப் புகலும்
என்குரு வேபள்ளி யெழுந்தரு ளாயே.

ஐந்துபூ தங்களும் அவைகளின் தொழிலும்
அளவிலா வுலகமும் கடவுள்பே ரருளால்
வந்துதித் தேயிருந் தழியும்முன் போலே
வருமிவற் றினில்மயங் காதருள் வெளியைச்
சிந்தைசெய் திடுகவென் றினிதுணர்த் திடுவோய்
திருவருட் கதிரவன் உதித்தனன் காணாய்
எந்தையே யருள்கவென் றன்பரேத் துகிறார்
என்குரு வேபள்ளி யெழுந்தரு ளாயே.

ஒப்புயர் வற்றமெய்ப் பொருளெனும் கதிரோன்
உதித்தனன் வினையிரு ளொழிந்ததுள் ளமெனும்
நற்பெருங் கமலமு மலர்ந்ததிவ் வாயால்
நவிலரு மாயையாம் பனியகன் றதுகாண்
தப்பிலா வுணர்வினால் இறைவனைக் கருதும்
தருணமிஃ தேயென வொலித்ததொண் சங்கம்
இப்பிற வியினில்மெய்ந் நிலையுணர்ந் திடவே
எனக்கரு ளப்பள்ளி யெழுந்தரு ளாயே.

ஓதுநூல் யாவினும் உறைந்திடும் பொருளை
உள்ளுணர்ந் தருளினால் அறிவொளி மிகுந்தே
தீதிலா ஆன்மஞா னப்பொருள் திரட்டித்
திவ்யமாய் உலகினர்க் கேதரற் கெண்ணி
கோதிலா அடியவர் இருப்பிடம் தேடிக்
கொண்டுசென் றேஉப தேசங்கள் அருளும்
சாதுவே ரெட்டியப் பட்டியில் தோன்றும்
சற்குரு வேபள்ளி யெழுந்தரு ளாயே.

ஔவியம் அற்றநெஞ் சினர்களாய் உலகோர்
அன்புடன் விளங்கிட வேண்டிநன் றுழைத்தோய்
செவ்விய பிள்ளையார் குப்பநன் னகரில்
திருவருள் விலாசத் தன்னையார்க் கருள்வோய்
திவ்விய மாய்த்திருச் சாத்தனூ ரினில்நின்
சீரருட் கொடியைநாட் டியபெருந் திறலோய்
எவ்வுயி ரும்பே ரின்புற நினைக்கும்
என்குரு வேபள்ளி யெழுந்தரு ளாயே.

அஃகலில் லாதமெய்ச் சுகம்விரும் பாமல்
அல்லுநண் பகலுமாய் அனுதினம் உழைத்தும்
வெஃகிய சுகம்பெறு துலகுளோ ரெல்லாம்
வீணிலே மாள்வதைக் கண்டிரக் கமுடன்
சுஃறென வினைக்கடல் வற்றிடச் செய்யும்
தூயநன் னெறியினை யெளிதிலே காட்டி
இஃதுதான் வழியெனச் சொல்லியின் பருளும்
என்குரு வேபள்ளி யெழுந்தரு ளாயே.

---

## அர்ச்சனை.

[அட்சர நட்சத்ர மாலை.]

---

அன்புரு வாயொளிர் அண்ணல் நமோநம
துன்பம் விலக்கிடு தூயோய் நமோநம
இன்பம் அனைத்தையும் ஈவோய் நமோநம
அன்புடை யோர்கட் கருள்வோய் நமோநம

ஆதர வேசெயும் ஐயா நமோநம
தீது தவிர்குரு தேவா நமோநம
நீதி காத்தருளும் நேயா நமோநம
சாதுவாய் அருளும் சாமீ நமோநம

இருள்கெ டப்புரியும் ஏகா நமோநம
மருளை மாற்றியருள் வள்ளால் நமோநம
கருணை யைச்சொரியும் கண்யா நமோநம
புருஷ ஸ்ரேஷ்டனெனப் போந்தாய் நமோநம

ஈசன் அன்பர்களைக் காப்பாய் நமோநம
    ஏசு முகம்மதொத்த எந்தாய் நமோநம
    ஏசுவோர்க்கும் நலம் ஈவோய் நமோநம
    தேசு மிக்க அருட் செல்வா நமோநம

உத்தமக்குண உதாரா நமோநம
    சுத்த ப்ரம்மவொளி தோய்வோய் நமோநம
    சித்தி யாவுமுற்ற சீலா நமோநம
    புத்தியைத்திருத்து புண்யா நமோநம

ஊமை பேசச் செயும் ஒருவா நமோநம
    காமம் நீக்கிடு மகானே நமோநம
    சேம நிதியனைய தேவே நமோநம
    யாம ளப்பரும் இயல்பே நமோநம

ஏதுவும் செய்யவல்ல ஈசா நமோநம
    இதய மாசகற் றிறைவா நமோநம
    புதுமை பழமை பொலிவோனே நமோநம
    சுதினமெவையுமெனச் சொல்வோய் நமோநம

ஏக்கம் தவிர்த்தினி தருள்வோய் நமோநம
    தூக்கம் தொலைத்த சுகரூபா நமோநம
    மார்க்கம் வகுத்தசுப்ர மண்யா நமோநம
    யார்க்குமே அருள் இனியோய் நமோநம

ஐந்து பொறிகளை அவித்தோய் நமோநம
    முந்தும் ஆணவம் முறித்தோய் நமோநம
    சிந்தெதன் வினைகள்வற்றச் செய்தோய் நமோநம
    மந்திரம் புகல் மணியே நமோநம

ஒன்றிறையென வுரைத்தோய் நமோநம
    என்றும் மெய்சொல இசைத்தோய் நமோநம
    நன்று செய்திட நவின்றோய் நமோநம
    பொன்றும் பாவமென்ற புனிதா நமோநம

ஓமெனும்பொரு ளுரைப்போய் நமோநம
    பூமியில்வந்தருள் போதா நமோநம
    மாமயல்தவிர் மருந்தே நமோநம
    நாம ரூபமுறு நாதா நமோநம

ஔவை போல்மொழி யருள்வோய் நமோநம
திவ்ய நெறியையருள் செய்வோய் நமோநம
எவ்வு யிர்க்கும் இரங்குவோய் நமோநம
வெவ்வினைகள் வீழ்த்தும் வீரா நமோநம

கற்றி டாதெவையும் கற்றோய் நமோநம
உற்ற உண்மை உணர்விப்போய் நமோநம
சொற்றி றன்மிகு சொற்செல்வா நமோநம
குற்ற மும்குணமாய்க் கொள்வோய் நமோநம

ஙகர மெனவேயிங் ஙனேற்பாய் நமோநம
சுகுண மனைத்துநல்கு சுத்தா நமோநம
சகல மொழிகளில் சதுரா நமோநம
புகலொ ணாதபுகழ் பூண்டோய் நமோநம

சமயம் யாவும்கண்ட சாந்தா நமோநம
சமர சத்தையருள் சாதூ நமோநம
அமல பக்தியருள் அன்பா நமோநம
நிமலன் கோயில் நிறுவுவோய் நமோநம

ஞமலி யெனைத்திருத்தும் நாதா நமோநம
விமல னருள்சுக விளக்கே நமோநம
குமர னெனப்பொலியும் கோனே நமோநம
நமனை வென்றசிவ ஞானி நமோநம

டம்ப மின்றிமிளிர் தக்கோய் நமோநம
நம்பு வோர்க்கருளும் நல்லோய் நமோநம
உம்பர் நாதனருள் உண்போய் நமோநம
வம்பர் களையும்வெல்ல வல்லோய் நமோநம

இணக்க மாசுச்சுகம் ஈவோய் நமோநம
வணக்கம் செயுமுறை வகுத்தோய் நமோநம
அணுத்வம் ப்ரமத்வம்முத லானோய் நமோநம
நுணுக்க முணர்த்துஞான நூலோய் நமோநம

தந்தை தாய்குரு என் தலைவா நமோநம
சிந்தை சொல்செயல் செழிப்பே நமோநம
விந்தை பல விளக்கும் விபுவே நமோநம
எந்தை யருளுலகுக் கீவோய் நமோநம

நன்ம னத்தினில் நண்ணுவோய் நமோநம
கன்ம னத்தையும் கரைப்போய் நமோநம
புன்மை தீர்த்தருள் புராணா நமோநம
வன்மை மிக்கமறை வாயா நமோநம

பகரொ ணாத்தவம் பண்ணினோய் நமோநம
நிகரி லாதவொரு நேயா நமோநம
இகப ரந்தரும் இறைவா நமோநம
யுகமி தில்சிறந்த யோகீ நமோநம

மறைமு தல்துதி வரைந்தோய் நமோநம
நிறைவு றுந்துதிபு னைந்தோய் நமோநம
கறையி லாவுளங்கொள் கர்த்தா நமோநம
முறையு ணர்த்திய முதல்வா நமோநம

யதிகள் வாழ்த்தும் யதிராஜா நமோநம
விதிவி லக்குசொல் விவேகா நமோநம
பதிதொ றும்செலும் பகவா நமோநம
கதியை நல்கு கருணாளா நமோநம

ரத்தி னம்என ரமிப்போய் நமோநம
முத்து ராமர்குரு மூர்த்தீ நமோநம
சுத்த அருள்விலாஸ் ஜோதீ நமோநம
முத்து சாமிக்கருள் மோனீ நமோநம

லச்சை தீர்த்த லாவண்யா நமோநம
இச்சை பூர்த்திசெயும் ஈசா நமோநம
விச்சை யாவும்வல்ல வீரா நமோநம
கொச்சை தீர்த்தருள் கொடுப்போய் நமோநம

வஞ்ச மற்ற அருள் வாரீ நமோநம
சஞ்ச லம்தவிர்க்கும் தந்தாய் நமோநம
நெஞ்சில் நின்றருள் நிமலா நமோநம
மிஞ்சு கர்வம்விலக் குவோய் நமோநம

அழகன் ஒளிவிளக்கும் அப்பா நமோநம
பழகு தமிழளித்த பண்பா நமோநம
விழையு மனைத்தும்தரும் மேலோய் நமோநம
அழிவி லருள்வழங் கறிவே நமோநம

ஓம் ஓம் ஓம்.

அருள்வளத் தைக்கொழித் திடவேண்டியே யென்றும்
அன்பருள மாம்நிலத் தே
அற்புதப் பொருள்நிறை நல் உபதேச மழைபொழிய
அழகாய் எழுங்கொண்ட லே

இருவகைப் பற்றினையும் வெட்டியெறி மழுவே யென்
இதயந் திருத்துகொழு வே
இணையற்ற பக்தியெனும் விதைதயைநாட் டிச்சாந்தம்
என்னுநன் னீர்பாய்ச்சி யே

மருவுசன் மார்க்கமாம் வேலியைக் கோலியே
மாண்பாய்ப் புரந்து ஞான
வளமான விளைவைப் பெருக்குமோ ருழவனே
வாக்குமன முங்கடந் தே

துரியநிலை மேவியொளிர் சுத்தசாத் வீகனே
சோதிதரி சனம்விரும் பும்
தூயஅடி யார்களுக் கருள்செய்குரு நாதனே
சுகவாழ் வெனக்கருள்க வே.

ஆசைக ளனைத்தையும் சுட்டெரித் துள்ளமதை
ஆண்டவன் இருக்கையாக் கி
அல்லுநண் பகலுமெந் நேரமு மவன்திரு
வடித்தியா னம்புரிந் தே

நேசமுடன் நல்யோக மார்க்கத்தை நாடியே
நிட்டானு பூதி யெய் தி
நிகரிலா யோகசக் தியினு லருட்செல்வம்
நிறையத் திரட்டிமகிழ் வாய்க்

காசினியில் ஈசனடி யார்களுக் குதவிடக்
கருதியாத் திரைசெய்தெங் கும்
கணபதிக் காலயங் களையமைத் தன்பரைக்
கட்டுதிட் டங்களுட னே

மாசற்ற நெறியிலொழு கச்செய்து சட்டமும்
வகுத்தீந்த ஞானகுரு வே
மனவழுக் கினைநீக்கி மெய்ஞ்ஞான அமுதினை
வழங்கிநீ யருள் புரிக வே.

இன்பவர மீந்தருள வல்லகுரு வேயடியர்
இதயத் தமர்ந்த குருவே
எண்ணற்ற துயர்களையும் நீக்குகிற குருவே
இம்பரம் வழங்கு குருவே

அன்புமிகு குருவேமெய் யறிவுதரு குருவே
அகந்தையை யகற்று குருவே
அகப்பற் றுடன்புறப் பற்றையும் வேரற
அகழ்ந்தெறியும் ஞான குருவே

மன்பதைகள் இன்பமுற இறைவனரு ளால்தினமும்
மகிழ்வோடு தவமுஞற் றும்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேசின்
மயத்தினில் நிலைத்த குருவே

என்பிழைக ளைப்பொறுத் தாட்கொண்ட குருவே
யதார்த்தநிலை நல்கு குருவே
இனிவிரைவில் அடியேற்கும் ஞானசுக மேயருள்க
ஏகாந்த மோன குருவே.

ஈகையில் மிகுந்தொளிரும் வள்ளல்களும் அறிஞர்களும்
எண்ணற்ற பலபுலவ ரும்
இலக்கண இலக்கியக் கலைஞரும் சான்றவரும்
ஏந்தல்களும் அந்தணர்க ளும்

ஓகைமிகும் அரசர்களும் வைசியரும் உழவர்களும்
உலகுபுக ழும்பெரிய ரும்
ஓதுமறை நாலுமோர்ந் துண்மையன் பால்தினம்
உரைத்தொழுகும் உத்தமர்க ளும்

யோகியரும் முனிவரும் இமையவரும் எண்ணற்ற
யுககால தவசிகளும் நல்
யோசனையொ டாராய்ச்சி செய்பவரும் உள்நோக்கி
யுக்தியால் உணருபவ ரும்

சோகமற நாடுமெய்ப் பொருளையீட் டியஞான
சோதிமய மானகுருவே
சுத்தசாத் வீககுண மீந்தருள்க சாந்தியொடு
சூரியவொளி யீந்தருள்கவே.

உலகெலாம் போற்றநெல் வேலிசில் லாவிலே
    ஓங்குரெட் டிப்பட்டியென்
  றெளிருநற் பதியிலுத யம்செய்கதி ரேஞான
    ஒளியே அருள்விளக் கே

இலகும்ஐங் கரவுபா சனையினால் அருளறிவை
    எய்திய மகாயோகி யே
  எங்கணும் பிரமமய மாய்க்காணு ம் ஞானியே
    ஏகாந்த சுகமோனி யே

பலதிருத் தலமுமுற் றேயருட் பாடல்கள்
    பகர்ந்தருட் செல்வமீட் டிப்
  பக்திமிகு மெய்யன்பர் கட்குநன் னெறிசொலிப்
    பரிவொடுப தேசம்அரு ளி

உலவாத பேரின்ப வாழ்வடைய வேபுரியும்
    உயர்ஞான குருநாத னே
  உனதுதிரு வடிதொழுதுன் மெய்த்துணையை வேண்டி-
    உவந்துநீ அருள்புரிக வே. [னன

ஊரூர்தொ றும்சுற்றி உத்தமர்க ளைத்தேடி
    உபதேச மொழிகள் அரு ளி
  உற்றபல துயர்நீக்கி எண்ணற்ற நோய்நீக்கி
    ஓங்குமல மாயைநீக் கி

சீராரும் இவ்வுலகின் உயிர்கள்பால் மெய்யன்பு
    செய்திடக் கடவுளின் பால்
  செப்பரிய நற்பக்தி பூண்டுவழி படநல்ல
    திட்டமும் வகுத்தளித் தே

தாராள மாயுதவி பலபுரிந் தனை இந்த
    தாரணியில் நின்பெயர்சொ லின
  சகலவித வ்யாதிகளும் அகலும்ஒரு பெருமையிவண்
    சாற்றுவது மிக்களவி தோ?

ஆராஅ முதமே உண்ணத் தெவிட்டா
    தகத்துள் ளினிக்கும்மது வே
  ஆன்மஞா னாநந்த நல்குகுரு நாதனே
    அடியேனை ஆண்டருள்க வே.

எண்ணங்கள் பலகோடி என்மனதி னில்தோன்றி
எண்ணற்ற துயர்நல்கு தே
எடுத்துரைத் தற்கொணுப் பேராசை யோர்புறம்
எழுந்துபோ ராடுகிற தே
திண்ணிய அகங்கார மாம்பேயொர் புறமாட
தீயபொய் யொடுபொரு மை
சினம்மடமை லோபம்மதம் மாச்சரியம் முதலான
சிறுபேய்கள் பலவும் ஆட
உண்ணவும் உறங்கவும் வீண்பொழுது போக்கவும்
உண்மையை மறந்திலய வும்
ஒருமையுடன் இறைவன்இரு பதமலர் நினைக்கா
துழல்கிறவர் உறவுகொள்ள வும்
நண்ணி அடி யேன்தினமும் அவமாக எனதுவாழ்
நாளைத் தொலைத்தல்நல மோ?
ஞானசுக மே அருளி எனையாள்க நற்பிரம
நாட்டம்மிகு குருநாத னே.

ஏக்கமுடன் ஏழையேன் இப்புவியி னில்காம
மென்னும் வலை யிற்சிக்கி யே
எந்தநே ரமும்அவதி யுறுதல்நன் றோ இறைவன்
இணையடித் தாமரைக ளே
ஊக்கமொடு மெய்ப்பக்தி யோடுபூ சித்திடற்
குரியநெறி யொன்றுமறி யேன்
ஒருவித முயற்சியும் செய்யாமல் ஞான அமு
துண்ணுதற் கேவிழைகி றேன்
சூக்கும வுணர்விலேன் முற்பிறவி களில்மனத்
தூய்மையுட னேகடவு ளைத்
துதித்ததுண் டோஎன்ப தறிகிலேன் இத்தகைய
துர்க்குணன் எனக்குமீ யே
மோக்கமெனும் நித்தியா னந்தசுகம் ஈந்தருள்க
முத்தர்பலர் போற்றிசெய் யும்
மூர்த்தியாம் கணபதி யருள்மிகப் பெற்றொளிரும்
முனிவனே தவராச னே.

ஐயனே நீ சொன்ன சட்டமதை அடியனேன்
அன்போடும் அனுசரிக்க
அருள்புரிந் ததுபோல் அதிற்சொல்லும் நெறியாவும்
அடியேன் கடைப்பிடித் தே

உய்யுமா றருளுவாய் மோகமா றியவலையி
னுட்படா தாண்டருளு வாய்
உலவாத பிரமஞா னானந்த மெய்திடற்
கோர்வரம் தந்தருளு வாய்

மெய்யுணர்வை யேயிந்த மேதினியு ளோரெய்த
மிகமுயன் றிடுபெரிய னே
மிருகவகை தாவர வகைமனித வர்க்கமுறு
வேதனைகள் யாவும்நீக் கிக்

கையில்அங் குசபாச மோதகம் கொம்பேந்து
கணநாதன் நல்லருளினைக்
கரதலா மலகமென நல்குகுரு நாதனே
கருணைமிகு குணபோத னே.

ஒருகணமும் இறைவனடி மறவாம லேயுள்
ளுணர்ந் துணர்ந் தொளிமயமா தாய்
ஒப்பில்பர மானந்த மென்னுமோர் அமுதந்தன்
றுண்டுண்டு கடவுளிட மே

பிரிவற நிறைந்தொன்றி யிலகுமன முடையவா
பிரியமுட னேஅடிய ரைப்
பிரமநிட் டையினிலமர் வித்தவர்க ளுக்கருள்
பெருக்குகா ருண்யசொரு பா

இருவினைக ளொப்புமல பரிபாகம் வாய்த்திடற்
கிதயந்த னைத்திருத் தி
இச்சைசெய லறிவுக் கதீதமா கியமோன
இன்பமுற அருள்புரிய வா

அரைநிமிட மேனும்இவ் வுடலையுல கினைமறந்
தடியனேன் நிட்டைபுரி ய
அன்போடு நீயருள்க வேறுதுணை யாருமிலை
அருள்ஞான குருநாத னே.

ஓதுபல கலைகட் கதிதமா யொளிர்கின்ற
உயர்ஞான போதமதையே
உற்றுற் றுணர்ந்துணர்ந் துண்மையன் பாற்கசிந்
துருகுநல் லுள்ளமீ வாய்

வாதுசெய் திடுபவர்க ளுறவென்றும் நாடாத
வகையருளு வாய் இறையருள்
வண்மைசொலும் வாயோடு சிரமேற் குவிந்துதொழும்
வார்கை யிரண்டும்அன் பால்

ஏதமற ஆலயம் வலம்வந்து சாட்டாங்க
மென்னுமுறை யால்வணங் கும்
யாக்கையும் பெற்றருளை யல்லாது வேறுதுணை
யிலையென்று நம்பிநிச மாய்

மேதினியில் ஞானவாழ் வுற்றென் குடும்பத்தர்
விரவுபல சுற்றங்க ளும்
வேறுபா டின்றியெவ் வுயிர்களும் பேரின்ப
விண்ணமுத முண்ண அருளே.

ஔவைதிரு நாரையூர் நம்பிகபி லர்க்கருளும்
அண்ணலருள் தன்னையடி யார்
அன்போடு பெற்றுளிர அருள்புரிந் தேநிட்டை
அமர்வித்துன் அங்கைகளி னல்

செவ்வையா யவர்கள்மெய் தீண்டிநல் லருள்செய்த
சின்மயா னந்தகுரு வே
தீயபல வினைசெய்த பாவியே னயினும்
திருவருளி னலாண்ட னை

எவ்வகையி லும்சோத னைகளினி செய்யாமல்
என்றனைக் காத்தருளு வாய்
ஏதுநீ செயினும்யான் செய்வதொன் றறிகிலேன்
இனியதுணை வேறெவர் சொலாய்

இவ்வுலகி லெவ்வுயிரை யும்கடவு ளாலய
மெனக்கண்டு பக்திசெய வும்
ஏகசுக போகமெனு மெய்ஞ்ஞான நிலையெய்தி
யிலகிடவும் விரைவிலரு ளே.

## குரு சொருபம் [அகரம் அடுத்த மெய் வரிசை]

அக்கர முமாய்ஒலியு மாய்ச்சொல்லு மாய்ச்சொல்லில்
அமைகின்ற பலபொருளு மாய்
அருவுமாய் உருவுமாய்ப் பருவத்தில் வருகிற
அருட்குருவு மாய்த்தெய்வ மாய்ப்

பக்கமொடு மேல்கீழி லாப்பொருளு மாய்இரவு
பகலும் கடந்தநிலை யாய்ப்
பகரவொண் ணாததாய் எண்ணவொண் ணாததாய்ப்
பார்க்கவொண் ணாதவடி வாய்த்

துக்கமொடு சுகமெனக் கருதாத மனமுடைய
தூயவர்க் குள்ளமுத மாய்த்
துரியமாம் வெளியிலொளிர் சோதியாய்த் திகழ்கின்ற
சுத்தபரி பூரணத் தை

எக்கணமும் மறவா துணர்ந்துணர்ந் துலகினையும்
என்னுடம் பையும்மறந் தே
ஏகாந்த மோனநிட் டானுபூ தியையடைய
இனிதருள்க குருசொருப மே.

அங்கிங்கெ னாதபடி எங்கும்உள் ளான்என
அநேகபெரி யோர்புகன் றார்;
ஆனாலும் ஏழையேன் அவன்இருப் பிடமதை
அறிந்ததிலை; மனமாசொ டே

எங்கெங்கு தேடினும் அகப்படான் எப்பொழுதும்
எனநவின் றனர்மெய்யடி யார்;
என்மன அழுக்கினை அகற்றுதற் கானநெறி
என்றும்யான் நாடியதி லை;

கங்குகரை யில்லாத பேராசை யென்னும்
கடற்குள்ஆழ்ந் தேஅலைந் தேன்;
கருணையொடு தூக்கிக் கடைத்தேற்ற வாஎனக்
கதறுவது கேட்கவிலை யோ?

தங்குதடை யில்லாது பெருகுகிற திருவருட்
சக்திப்ர வாகமே! நற்
சத்வமே! சுத்தமே! சத்யமே! நித்யமே!
சாந்த சற்குரு சொருப மே.

அச்சாணி யாய்உலக மாம்தேரை என்றென்றும்
அற்புதம தாய்நடத் தும்
ஆதிபர வத்துவை அனாதியா கியபொருளை
ஆனந்த மோனவமு தை

பச்சைப்ப சேரென்ன எக்கால மும்தளிர்
பரப்பித்த ழைக்கும்ஒளி யைப்
பற்றற்ற உள்ளமுடன் அடியனேன் பற்றிடப்
பதறியழு தழுதுகத றி

இச்சையா கியபாலை யைக்கடந் தருளென்னும்
இனியபைஞ் சோலைஅண் மி
என்றும்அழி யாதபே ரின்பமாம் நீர்பருகி
ஏகசுக போகமெய் தி

அச்சமொரு சிறிதும்இல் லாதுவாழ் கின்றவாழ்
வருளுவாய் ஞானவடி வாம்
ஆண்டவனை எண்ணுகென யாவர்க்கும் ஓதிய
அருள்ஞான குருசொருப மே.

அஞ்சல்என் றடியார்க ளுக்கபயம் ஈந்துகாத்
தருளாட்சி புரியும் இறையை
அன்போடும் உள்ளம் கசிந்துகண் ணீர்மல்கி
அழுதுதொழு தேத்த அறியேன்

வெஞ்சினம் உலோபம்மோ கம்காமம் மாச்சரியம்
வீண்வம்பு பொய்பொ றாமை
வெகுபொருளகள் மீதாசை டம்பம்மதம் முதலான
மிண்டரொ டுழன்று கெட்டேன்

வஞ்சகம் மிகுந்தபாழ் நெறியினில் அலைந்தெனது
வாழ்நாளை வீணாக் கினேன்
மாயையாம் வலையினுட் சிக்குண்ட எனைமீட்க
வருகஎன முறையிடு கிறேன்

சஞ்சலம் எலாந்தவிர்ந் தானந்த மோனநிலை
சார்ந்திட அருள்செய் தாள்வாய்
சகலவுயிர் களும்எளிதில் இன்பமுறு நல்லநெறி
சாற்றவரு குருசொரு பமே.

அட்டோத்ர சதநாமம் ஓதிஉள் ளன்போடும்
அர்ச்சிக்கும் மார்க்கம் அறியேன்
ஆராத காதலுட னேஉருகி அழுதுதொழும்
அற்புதத் துறையும் அறியேன்

அட்டாங்க யோகங்கள் செய்ய அறி யேன்ஞான
ஆகாச தத்வம் அறியேன்
அடிமையாய்ப் பிள்ளையாய் நேசனைப் உள்ளெழுந்
தருளும்மெய்ஞ் ஞான வொளியாய்

இட்டமொடு தொடர்புகொளும் முறையும் அறி யேன்
இவ்வுலகி லேஅலை கிறேன் [வீணில்
எண்ணற்ற பேராசை யால்மனக் கோட்டைகளை
எந்நேர மும்கட் டினேன்

பட்டதெல் லாம்போதும் இனியும்நீ சோதனைகள்
பலபுரிதல் நீதி யாமோ?
பாவியேன் வினைதீர்த்து மெய்ஞ்ஞான அமுதைப்
பரிந்தருள்க குருசொரு பமே.

அண்டபிண் டங்கள்எல் லாம்இறையின் வடிவென்பர்
அணுஎன்பர் மேரு என்பர்
அனைத்தும் அவன் உருஎன்பர் அவையல்ல என்பர்
அருளியல்பு பெரிதென் பரால் [அவன்

அண்டர்முனி வரர்எலாம் உணரல்அரி தெனினும்
அற்புத மிகும்தரி சனம் [அவன்
அன்போடு போற்றும்மெய் யடியவர்க் கெளிதென்பர்
அன்புசெயும் நெறி அறிகிலேன்

தொண்டுசெயும் மார்க்கமும் தெரிகிலேன்தொண்டரைச்
சூழ்ந்து தொடர் புங்கொண் டிலேன்
தூய்மைசிறி தே னுமில்லை என்றாலும் ஏழையைத்
தொண்டனாய் ஆண்டு கொண்டாய்

கொண்டபின் குணமின்மை நாடலால் பலகோடி
குற்றம்உள் ளமை நாடலால்
கூடிவரு லாபமிலை ஆதலால் செம்பொருள்
கொடுத்தருள்க குரு சொரு பமே.

அந்தமனம் உதயம்எதும் இல்லாமலே ஒளிர்
அருட்கதிரை ஆன்ம ஒளியை
ஆதாரம் ஓராறில் ஐம்பத்தொ ரட்சரமும்
ஆகிமிளிர் கின்ற சுடரை
சுத்தமன மாகிய செழும்புலத் தினில்விளை
சுயஞ்சோதி யான விளைவை
சூக்மத்தி னுள்ளும்ஒரு சூக்மமாய் இலகுகிற
தூயதே சோமயத்தை
புத்தியுக் திப்பொறி புலன்கட் கதீதமாய்ப்
பொலிகின்ற திரு விளக்கை
புண்யபா வப்பற் றிலாதஞா னியர்கண்ட
புதையலைப் பூர ணத்தை
எத்திக்கி லும்கதிரை நீட்டிஉயிர் களையெலாம்
ஈர்க்கின்ற காந்த வடிவை
இதயமிசை யேகண் டிறைஞ்சிநற் சேவைசெய
இனிதருள்க குரு சொருபமே.

அந்தம்நடு ஆதியில் லாதமெய்ச் சோதியொளி
அடியனேன் காண வேண்டும்
அப்பெரிய சோதிப்ர காசத்தி லேகலந்
தானந்த மெய்த வேண்டும்
இந்தவுல குயிர்களின் துயரைமெய் யருளினால்
எளிதினில் அகற்ற வேண்டும்
எவ்வுயிரும் இன்பமுற வேகண்டு மகிழ்கின்ற
எண்ணமுடன் அன்பு வேண்டும்
எந்தநே ரத்திலும் பொதுநலச் சேவையை
இயற்றுகிற சக்தி வேண்டும்
இனியதொரு த்யாகவாழ்க் கையிலே நிலைத்தெங்கும்
இன்பமே நிறுவ வேண்டும்
பந்தபா சங்களுள் மூழ்கிஅலை கிறஎன்
பகற்கனவும் மெய்க்க வேண்டும்
பரவெளியில் ஒளிரும்நின தருளொளியில் ஒருசிறிது
பகுதிஅருள் குரு சொருபமே.

அப்பனே அன்னையே அருள்மிகும் குருவே
அனாதியா கிய தெய்வமே
அருளறிவு மயமே சிதாகாச வடிவமே
ஆனந்த மாம் அமுதமே
இப்பெரிய உலகமுதல் எண்ணற்ற கோடிஉல
கெங்கும்நிறை வுறு கருணையே
எல்லா உயிர்க்கும்உயி ராகியொளிர் ஒளியே
எனப்போற்றி இதய மலர்மேல்
ஒப்பரிய திருவருட் கதிரொளியி னைக்கண்
டுளங்குளிர வேயபரு ளுவாய்
உலகுயிர்க ளுக்கெலாம் திருவருட் சக்தியால்
உயர்சேவை புரிய அருள்வாய்
எப்பொழுதும் எவ்விடமும் இறையொளியை யேகாணும்
இன்பவரம் ஒன்று தருவாய்
இந்நெறி செலத்தடுக் கிறமனதை வெல்லும்நெறி
இனி தருள்க குரு சொருபமே.

அம்மையிலும் இம்மையிலும் நன்மைபெறு நன்னெறியை
அன்பொடுயிர் கட்கருளினாய்
அல்லல்தரும் என்மனதை எளிதடக் கிடுநெறியை
அருள்கஎன வேண்டு கின்றேன்
செம்மையில் லாவழியி லேசென்று காமமாம்
சேற்றினுள் அழுந்தி நாளும்
தீயஎண் ணங்கள்பல எண்ணிஎண் ணிக்கொடிய
செய்கைகளை நாடி நாடி
வெம்மைமிகு பேராசை கொண்டுவய தினையெலாம்
வீணில்யான் போக்கல் நன்றோ?
வேதனை யெலாந்தவிர்த் தானந்த மோனநிலை
விரைவில்யான் எய்த அருள்வாய்
பொம்மைபோல் ஆடிவாழ் நாளைவீ ணாகவே
போக்கும்மா னிடர்கட் கெலாம்
புத்துணர் வளித்துண்மை யின்பமுறு செந்நெறி
புகன்றசற் குரு சொருபமே.

அய்யனே அரைநிமிட நேரமாயினும்நிட்டை
அமரவே வேண்டுமென்றால்
அந்தோஎன் மனம்அதனை நாடவேயில்லையே
அவதிதரு காம வலையில்
பொய்யான நெறிகளில் புகுகின்ற தன்றிநற்
புனிதநெறி புகுவதில்லையே
பொல்லாத பேராசை கொண்டலையுதையஇப்
புன்மைதீர்த் தாண்டருளுவாய்
மெய்யான ஞானநெறி உணர்கின்ற திறமதனை
விரைவில்நீ ஈந் தருளுவாய்
மேலான த்யாகவாழ் வருளுவாய் நிட்டையை
விழைந்தமர்ந் தினிய பாலுள்
நெய்யான துளதுபோல் எங்கணும் பிரமவொளி
நிறைவாகி யொளிர் உண்மையை
நேருறக் கண்டின்ப மெய்துநெறி நல்கிட
நினைந்தருள்க குரு சொருபமே.

அர்ப்பணம் இறைவனுக் கேசெயற் பயனெலாம்
ஆக்கிமெய் யருள் வாழ்விலே
அடியேனும் வாழ்ந்தருட் சோதியொளி யூடே
அகத்துட் கலக்க வேண்டும்
சர்ப்ப மது போல்சீறி வந்தே கடித்தெனைத்
தப்புநெறியிற் செலுத்தும்
தவறான காமக் கொடும்பகையை வென்றிடத்
தக்கநெறி தந்தருளுவாய்
கர்ப்பத்தி னுள்ளே வளர்கின்ற சேயையும்
கல்லினுள் தேரை தனையும்
காத்தருளும் இறையருள் எனைக்காக்கும் என்பதென்
கல்மனம உணர்தல் என்றோ?
துர்ப்பழக் கங்களெல் லாம்தொலைய அருள்செயத்
தோன்றும் ஞானச் சூர்யனே
தூயபர மானந்த அமுதருள் சமுத்ரமே
சுகுணசற் குரு சொருபமே.

அல்லல் தரு காமக் குழிக்குள்வீழ்ந் தென்வயதை
அவலமாய்ப் போக்கல் நன்றோ?
அவநெறி யெனும் திமிரம் அகலவரு பானுவே
அருள் மாரி பொழியும் முகிலே
கல்லிநிகர் மனதும் கரைந்துட் கசிந்திடக்
கருதி அஞ்ஞானம் என்னும்
கருந்திரை அகற்றிஉட் பலதிரையும் நீக்கிக்
கருத்தினை விளக்கும் ஒளியே
சொல்லரிய கருணைவடி வாகிமணி வாசகர்
சொலும்வாச கத்தே னையோ
தூயதிரு வாய்மொழியையோ மூவர் மறையையோ
சொல்லிமன துருகி யறியேன்
வெல்லரிய ஐம்பொறி யடக்காம லேகாம
வெறிபிடித் தலையும் எனைநீ
வீணன்என நீக்காமல் அருள்நெறிக் கீர்த்தருள
வேண்டும்என் குரு சொருபமே.

அவ்வழியில் செல்வதோ இவ்வழியில் செல்வதோ
அல்லதெவ் வழி செல்வதோ
அனைவரும் அநேகவழி புகல்கிறு ரேஎன்ன
அவதிபடை யாமலேநீ
இவ்வழியில் ஏகுக எனத்தூய வழிதந்த
இனியநற் றுணையே! பவம்
எனும்கடல் கடத்தவரு புணையே! என் ஆணவம்
எனும்பகையை வீழ்த்து கணையே!
செவ்வியநின் உபதேச நெறிநின்று நிட்டையைச்
சீராய் அனுட்டித்(து) உ(ய்)யத்
திருவருளை நல்காது காமவலை யினில்விழச்
செய்வது தகாதையனே;
செவ்வியுண ராதென்னை ஆட்கொண்ட பின்னர்என்
திமைகளை போக்கல் நன்றோ?
சீரிய! நின் மைந்தன்என் அகக்கதவை இனிதே
திறந்தருள்க குரு சொருபமே.

அழிவற்ற செம்பொருளை உணராமலேஏழை
அவனியில் அலைந் தலுத்தே
அநியாய மாகஎன் வாழ்நாளை வீணுக்கல்
ஐயநீ அறியா ததோ?
வழிதவறும் என்மனத் தினைமாற்ற வல்லநன்
மருந்துனது கையில் இலையோ?
மருளுற்ற என்பால் நடந்துவெகு தூரம்நீ
வரநேர மாகின்ற தோ?
அழுது தொழு துருகியுனை வேண்டுதிறம் அடியனேன்
அறியாமை தானோர் குறையோ?
அன்புவடி வானநீ அடியேனை இவ்வா
றலைத்தழகு பார்ப்ப துண்டோ?
பழுதுபடு நெறியிலுறு பாவியை எடுத்தாண்டு
பரிவொடருள் அமுதம் ஊட்டிப்
பக்குவம் அளித்தின்பம் நல்கவிரை வினில்வருக
பரஞான குரு சொருபமே.

அள்ளியள் ளிக்கருணை அமுதத்தை அனைவர்க்கும்
அன்போடு தரும் வள்ளலே
ஆசா பிசாசத்தை ஓட்டிமெய்ஞ் ஞானவித்(து)
அடியவர் உளத்(து) ஊன்றியே
தள்ளரிய ஐம்புலச் சேட்டையாம் களையைத்
தகர்த் தெறிந்(து) அன்பு நீரைத்
தண்ணெனப் பாய்ச்சிநற் சாந்தமாம் வேலியைச்
சதுருடன் கோலி அறிவால்
உள்ளுணரும் மெய்ப்பத்தி யாம்காவல் செய்தே
உயர்ந்தபர போக விளைவை
உண்மையா கியசுத்த சாத்விக வழியினால்
உண்டுண் டுயிர்கட் கெலாம்
கொள்ளுக எனக்கொடுத் தெங்கும்ஆ னந்தவொளி
குலவிடக் கண்டு மகிழும்
கோதில்வரம் நல்குவாய் ஆன்மலட் சியமே
குறிக்கொளும் குரு சொருபமே.

அற்பமா கியவாழ்வை அடியேன் விரும்பியே
அனுதினமும் அனவ ரதமும்
அலைவதே தொழிலாகி எண்ணற்ற அவதியுறல்
அழகோ புகன் றருளுவாய்
பற்பல விதங்கள்யான் கற்றதும் கேட்டதும்
பாழ்வழியில் நுழைவ தற்கோ?
பரமகுரு வானநீ ஆட்கொண்டும் இவ்வாறு
பரிதவித் திட விடுவதோ?
நற்பழக் கத்தையே அறியாது வீணில்வாழ்
நாளைக் கழித்தல் நலமோ?
ஞானமா மழுவினால் வேர றஎன் வினையென்னும்
நச்சுமா மரம் வீழ்த்துவாய்
சொற்பனிமி டங்களா யினும்ஆத்ம நிட்டையிற்
சொக்கிச் சிவா னந்தமாம்
தூயவமு துண்ண அருள் நல்குவாய் மோனபர
துரியமே குரு சொருபமே.

அன்னம்உடை காசுக் கலைந்தலைந் தேநாளும்
அவதியடை கின்ற தன்றி
அநியாய மாய்க்காம மாம்குழியி லேவிழுந்
தடியேன் வருந்து மாறும்
நின்னருள் புரிந்திடிற் செய்வதொன் றறிகிலேன்
நிறைகருணை யால் எடுத்தே
நிகரிலா மெய்யின்ப மாம்கரையில் சேர்ப்பைஎன
நினைவுற்று வேண்டு கின்றேன்;
அன்னைதந் தையர்எண்ணி லாரேனும் அவர்காட்டும்
அன்புநின் அருட்கு நிகரோ?
ஆயிரங் கோடிசூ ரியர்களொளி யாயினும்நின்
ஆத்மவொளி யினையொவ்வுமோ?
முன்னைவினை யாவுமே வெந்தொழியு மாறுளே
மூண்டெழுந் தோங்கு கனலே!
முக்தியா கியகனியை நல்குகற் பகமாய்
முளைத்தசற் குரு சொருபமே.

கடல்மடை திறந்ததெனெ உண்மையன் பர்க்கெலாம்
கருணையமு தினை வழங்கும்
கர்த்தனைக் கருதிஉள் ளுருகிஆ ருகஇரு
கண்களும் மழை பொழியவே

உடல்முழுது மேபுளக மெய்தஉல கினைமறந்
துணர்வைஅவன் வசமாக் கியே
ஒப்பற்ற இன்பம்நுகர் நிலையடைக யாரும்என
உபதேசம் நல்கும் வள்ளால்

திடமான உடலும்நற் றிடமான மனதும்மெய்
திகழ்ஞான வொளியும் அழகும்
சிற்றின்ப வாழ்க்கையைப் பேரின்ப வாழ்க்கையாய்ச்
சீருறப் புரிதிற மையும்

கடமையை உணர்த்திஅக் கடமைதனை நெறியொடு
கடைப்பிடித் திடும்முறை யையும்
காசினிக் கருளும்வல் லபமும்உடை யோய்உனது
கருணையருள் குரு நாதனே.

காதலா கிக்கசிந் திருகண்நீர் மல்கியிக்
காசினியை யேமறந் து
கதறிஅழு தழுதுபத றித்துடித் தையகோ
காலன்வரில் என்செய்வ தெனத்

தீதிலா வுணர்விஞல் இறைவனை வழுத்தியே
திருவருட் காளாவ னோ?
தீயஎண் ணம்வார்த்தை செய்கையை விடுத்தன்பு
செய்திடவும் முயலு வேனோ?

போதெலாம் வீணிற் கழிக்காமல் அருள்ஞான
போதத்தை நாடு வேனோ?
பொறிவழியில் ஏகும்என் மனதைஅருள் நெறியிற்
புகுத்தும்நாள் விரைவில் வருமோ?

ஆதிநடு அந்தம்எதும் இன்றிஎல் லாமாகி
அருள்நாட கம்புரியும் ஓர்
ஆனந்த வத்துவருள் உண்டுயிர்க ளுக்கருளும்
அண்ணலே குரு நாதனே.

கிருபையெனும் அருவிபல வழிகின்ற ஆனந்த
கிரியே அருள்ஞான மாம்
கிரணம் பரப்பியெழும் இன்பசூரியனே
கெடாதென்றும் இலகும் ஒளியே

பெருகுதுயராம் இருள் தவிர்க்கும்வெண் மதியே
பெருங்கருணை பொழியும் நிலவே
பிரபஞ்ச தாபநீங் கிடஅருள் மழையினைப்
பெய்யவரு கின்ற முகிலே

சருகுபட் சணமுண்டு பலநாள் வருந்தித்
தவம்செய்வோர் எய்து பேற்றைத்
தாரணியில் இல்லறம் நடத்துவோர் எய்தும்வழி
சாற்றும்மெய்ஞ் ஞான மணியே

உருகுமன துடன்நின து நெறியைக் கடைப்பிடித்
தொழுகுதிறன் ஈந்தருளுவாய்
உண்மையா கியசுத்த சத்வவொளி நல்குவாய்
உயர்மோன குரு நாதனே.

கீழ்நெறியி லுறும்எனையும் உயர்நெறியில் ஈர்க்கஎழு
கீதமே ஞான யாழே
கேடற்ற நிலையையருள் மோன இசை யேஅன்பர்
கேட்டிடக் கூவு குயிலே

சூழ்பவம் அனைத்தையும் சுட்டெரித் திடவல்ல
தூயசிற் கனலே பெருந்
துன்பக் கடற்குள் எழுந்தும்எனை அன்போடு
தூக்கவரு கின்ற துணையே

பாழ்வழக் கங்களிற் கண்மூடி யேகியே
பாவமூட் டையை வளர்த்துப்
பக்டித்திரிந்த எனை ஆட்கொண்ட நின்னருட்
பண்பை என் னென்று மொழிவேன்!

வாழ்வையே த்யாகவாழ் வாக்குவாய் சேவையே
மாநிலத் தாற்ற அருள்வாய்
மாசிலா ஞானவொளி நல்குவாய் இன்பே
வழங்கவரு குரு நாதனே.

குணமெனும் குன்றேறி நின்றநிலை யேஅன்பர்
குறையெலாம் தீர்க்கும் நிறைவே
கோதில்பே ரானந்த வொளியேமெய் யடியரைக்
கூவுதெய் வீக ஒலியே

பணமிகச் சேர்த்திடப் பேராசை மேற்கொண்டு
பாவமே செய்து செய்து
பலரையும் அலட்சியம் பண்ணி ஆன்றோரைப்
பழித்துப் படா டோபமாய்

உணவுக் குடைக்கு வீண் செலவுக் கெனத்தினம்
உழைத்தலுத் திட்ட தன்றி
உன்னன்பை நாடிடவும் உன்னருளை யெய்திடவும்
உன்நெறியை இனிதோம் பவும்

கணநேர மாயினும் கருதிலேன் எனினும்நீ
கைவிடேல் என்னை ஐயா
காத்தருளல் நின்பொறுப்(பு) இனியஅருள் அமுதினைக்
கடிதிலருள் குரு நாதனே.

கூற்றுவந் தால்ஏது செய்வதென அறியாது
கூத்தாடி நாள் கழித்தேன்
குறிக்கோ ளிலாதுகெட் டேன்அன்பி லாதுதுர்க்
குணனாகி யே திரிந் தேன்

நேற்றிருந் தோர்இன்று சுடுகாட்டி னில்வெந்து
நீறுவ தைக்காண் கிறேன்
நேருறக் கண்டபினும் ஆசையை ஒழித்தின்ப
நிட்டையினை நாட நினையேன்

மாற்றறிய வொண்ணாச் செழும்பசும் பொற்சோதி
மயமான அருளொளி யினை
மயல்மிகும்இவ் வேழையேன் கண்டுளம் குளிரும்நாள்
வருமோ புகன்றரு ளுவாய்

ஊற்றுபோல் என்றென்றும் வற்றாமல் அருள்வெள்ளம்
ஓங்கியுட் பாய அதனுள்
உடலுணர்வும் உலகுணர்வும் இன்றிமூழ் கிக்களித்
தொளிர்கின்ற குரு நாதனே.

கெட்டதே எண்ணினேன்; கெட்டதே பேசினேன்;
கெட்டதே செய்து கெட்டேன்;
கீழான நெறியில்யான் சென்றுவீ ணாகவே
கெடுவதைப் பார்த்த பின்பும்

இட்டமே போல்ஆட விட்டிடுதல் நல்லதோ?
எனையாள மன மில்லையோ?
இன்பநெறி யில்லையோ? அந்நெறிக் கேஎன்னை
ஈர்க்கும்நற் றிறனும் இலையோ?

துட்டனே யாயினும் காத்தருளு வோம்எனும்
தூயகரு ணையும் இல்லையோ?
சொன்னஇவை எல்லாம் இருக்கநீ காவாது
சும்மா இருத்தல் ஏனோ?

விட்டகுறை தொட்டகுறை வந்தணுக வில்லையோ?
விரைவில்மெய் யுணர அருள்வாய்
வித்தக த்யாகவாழ் வாற்றிமெய்ஞ் ஞானமுற
விழைகிறேன் குரு நாதனே.

கேள்வியா லும்கற்ற கல்வியா லும்பெற்ற
கீர்த்தியா லும்செல் வர்தம்
கேண்மையா லும்தேக ஆண்மையா லும்சுகம்
கிடையா தெனப் புகன்று

வேள்வியாய் வாழ்வாற்றி ஆணவா திகளை அதில்
மேவும்ஊ ணக்கி அருளே
மேலான அவியெனப் பெற்றுயிர்க ளுக்கெலாம்
மெய்யின்பம் ஈந்தன் பரை

ஆள்வதற் கேஅவ தரித்தமெய்ஞ் ஞானியே
அகமேவு சுக மோனியே
அன்பமுத மேஇன்ப மழையே அருட்கனியை
அடியேன் அருந்தி மகிழும்

நாள்விரைவில் வருமோ எனப்பார்த்து ளேன்இதனை
நன்றுநீ அறிதி கண்டாய்
ஞானநிட் டையினில்யான் மூழ்கஒரு வரம்விரைவில்
நல்கியருள் குரு நாதனே.

கையறவி லாநடுக் கண்ணொளி திறந்தருட்
கதிரையான் காண வேண்டும்
காசாசை முதலான பேராசை நீங்கியிரு
கண்மூடி அமர வேண்டும்

பொய்யுறு சடங்குகளில் ஏகாமல் என்மனம்
புனிதநெறி நாட வேண்டும்
பொழுதையெல் லாம்வீணி லேபோக்கி டாதருட்
புகழிலே தோய வேண்டும்

மெய்யுரையை யேபுகல வேண்டும்அடி யார்நேயம்
மேற்கொள்ள வேண்டும் அன்பே
மிகவேண்டும் நினதுவழி புகவேண்டும் ஆன்மார்த்தம்
வேண்டும்நல் லுள்ளம் வேண்டும்;

ஐயமில் லாதன்பர் அருள்நெறி கடைப்பிடித்
தானந்த அமுதுண் ணவே
அன்போடு முறைவகுத் தவ! விரைவி லேயின்ப
அமுதருள்க குரு நாதனே.

கொண்டபின் குற்றங்க ளைப்பார்ப்ப துண்டோ?
குணம்சிறிதும் இல்லை யெனினும்
கோதிலாத் தூயவழி யிற்றிருப் பும்சக்தி
கொண்டுளாய் ஆத லாலே

பண்டைவினை யின்வலி தடுத்தாலும் அதனையுன்
பழுதற்ற தவவலி யினால்
பஸ்மமாக் கித்தூய ஞானநெறி தந்தெனைப்
பாதுகாத் தருளல் வேண்டும்;

தொண்டுபல செய்துயிர்க ளெய்துகிற துன்பம்
துடைக்கும்நெறி நல்க வேண்டும்;
தூய்மையா கியத்யாக வாழ்வருளி மெய்ஞ்ஞான
சோதியிற் சேர்த்தல் வேண்டும்;

கண்டப்ப டாதகண் டாகார வத்துவாய்க்
கருணைமய மாய்நி றைவுறும்
கர்த்தன் அரு ளினைஎளிதில் எய்தும்வழி கூறவரு
காருண்ய குரு நாதனே.

கோபமொரு புறம்வந்து தோன்றியே என்றனைக்
கொல்லாது கொல்லு கிறதே;
கொடியஎண் ணங்களும் சொற்களும் செயல்களும்
கூடிஎனை நாச மாக்கிப்

பாபமூட் டையைவளர்க் கின்றகொடு மையையும் நீ
பார்த்திருக் கின்ற தழகோ?
பட்டதுன் பங்கள்எல் லாம்போதும் இனிஎனைப்
பாழ்நெறி செலுத்தல் வேண்டாம்;

தாபமிக வுற்றுத் தவிக்கும்எற் கருள்நீர்
தரும் தருணம் எத்த ருணமோ?
தாமதம் புரியவேண் டாம்; கருணை வள்ளலே!
தயவுபுரி வாய் விரைவிலே;

ஞாபகம் மறந்தும்மெய் யருளன்றி வேறுபொருள்
நான்வேண்டி டாமல் அருள்வாய்;
ஞானநா யகனருளை எளிதிலுயிர் கட்கெலாம்
நல்கவரு குரு நாதனே.

களவினன் றுண்பதற் காகாத கனியையும்,
கனவிடாய் தீர்ப்ப தற்கே
கடுகளவும் உதவாத நீரையும், வாயாற்
கடிக்க வாகாக் கழையையும்,

செவ்வையுற இறையருளை எண்ணுதற் காகாத
தீயநெஞ் சையும் அன்பினால்
சேவைசெய் யாதுண் டுறங்கிக் கொழுக்கின்ற
தேகத்தை யும் புவியிலே

எவ்வாறு திருவருள் படைத்ததோ? அறிகிலேன்;
ஏழையேன் வாழ்வும் வீணே
இவ்வாறு பாழாவ தெண்ணில், அருள் என்றனையும்
ஏன்படைத் திட்ட(து)? அந்தோ!

ஒவ்வாத நெறியிலே ஏகும் அடி யேற்கும்நீ
உண்மையை உணர்த்தல் வேண்டும்;
உயர்மோன இன்பமதை நல்கவே வேண்டும்; அன்
புருவான குரு நாதனே.

அரும்பும் தனிப்பரா னந்தத்தை அடியேன்
அருந்திச் சுகிக்க வேண்டும்
அதற்கேற்ப உனைமெல்ல மெல்லவுள் கிடவுண்மை
யன்பையான் எய்த வேண்டும்

கரும்பினு மிகுந்தசுவை யமுதமாய் நீஎன்
கருத்தினுள் இனிக்க வேண்டும்
கல்லைநிகர் மனதைக் கரைக்கவே வேண்டும்
கருத்தைத் திருத்த வேண்டும்

விரும்பியுன் தரிசனம் காண அடி யாரெலாம்
வேண்டிநிற் பதுவும் அறிவாய்
வேறுதுணை இந்தஏ ழைக்கில்லை என்பதும்
விளம்பினேன் அதுவும் அறிவாய்

அரும்பொனே வருகமணி யேவருக அன்பர்களை
ஆண்டருளும் அரச வருக
அண்ணலே வருகஅரு ளறிவெனும் பேரொளி
அளித்தருள்க குரு நாதனே.

உயர்வற உயர்ந்தநிலை யுறுமோனி வருகஎன்
உளத்தொளி விளக்க வருக
உண்மையறி வானந்த வுருவோடு மொன்றுகிற
உயர்நிலை யளிக்க வருக

உயிர்க்குயி ரெனத்திகழ் ஒளித்திவலை யைச்சிறியன்
உணருமா றருள வருக
உணரவரி தாம்பொருளை உணர்வினுக் குணர்வாய்
உணர்த்தியருள் பொழிய வருக

அயர்வுற் றழுங்கும் இத் தருணத்தில் அடியேனை
அருள்நெறிக் கீர்க்க வருக
அரைநிமிட மும்தாம திக்காமல் விரைவிலே
ஆண்டருள வருக வருக

பயிர்வாடு கையில்மழை பொழிந்துகாத் தருளப்
படர்ந்தெழு முகில் போலவே
பார்மயலில் வாடிடும் எனக்கருள வந்தருள்க
பரஞான குரு நாதனே.

மறப்பொடு நினைப்பற இறப்பொடு பிறப்பற
மனத்துறும் அழுக்கு விலக
மயக்கற இயக்கற இழுக்கற சழக்கற
வழக்கற விளக்கம் நல்கச்

சிறப்புற உதித்தகுரு நாதநின் தரிசனம்
சிறியனேன் காண வேண்டும்
திருவடிக ளைத்மெதாழுது போற்றிமெய் யன்போடு
செந்நெறி பிடிக்க வேண்டும்

அறப்பெருங் கடலமுத மேவருக எனநான்
அழைப்பதும் கேட்க விலையோ?
அடியனேன் செய்தபிழை யுண்டோ? பொறுத்தருளும்
ஆண்டகையும் நீயல் லையோ?

மறைப்பினை யகற்றியரு ளொளிநல்க இத்தருணம்
வந்தருள்க வந்தருள் கவே
மன்னுமுயி ரெல்லாம் மெய் யின்பமுறு நன்னெறி
வழங்கவரு குரு நாதனே.

ஓமென்னும் ஒலியாகி எங்கும்நிறை மெய்ப்பொருளின்
உண்மையை யறிந்து கொண்டாய்;
உலகுயிர்கள் உய்யும்நெறி எளிதருளல் நன்றென
உணர்ந்துசட் டமும் வகுத்தாய்;

காமவலை வீழ்ந்தயரும் எனையும்நின் அன்பர்கள்
கணக்கினுட் சேர்த்த வுன்றன்
கருணையென் கூறுவேன்? இனியிந்த ஏழையைக்
கைவிடாய் எனநம் பினேன்;

மாமயல் தவிர்த்தின்ப வாரிதி மடுத்திடும்நல்
வழியினை யுணர்த்தல் வேண்டும்;
மறுக்கமாட் டாய்;நீ மறுத்தாலும் வேறுதுணை
மற்றெங்கும் யானறி கிலேன்;

தீமைசெய் தோன்எனத் தள்ளினும் போகேன்;
திருத்தாள் பிடித்தழு கிறேன்;
தீராமல் என்வழக் கினைவிடேன் வழியைத்
திறந்தருள்க குரு நாதனே.

## கண்ணிகள்

சற்குருதேவா—ஞான—சற்குருதேவா
சங்கடமெல் லாந்தவிர்ப்பாய் சற்குருதேவா

ஆசைகள் மிகுந்த தையோ சற்குருதேவா—இவை
அகல்வதெப் போதோ சொல்வாய் சற்குரு தேவா
மாசெலாம லென்மனதை சற்குருதேவா—நீதான்
மாற்றுவதெப் போதோசொல்வாய் சற்குருதேவா(சற்

எவ்வுயிர்க்கும் தொண்டு செய்ய சற்குருதேவா—சற்றே
இவ்வுடற்குத் தெம் பளிப்பாய் சற்குருதேவா
செவ்வையுற நின்பெயரை சற்குருதேவா—யானும்
செப்பிக்கடைத் தேறவேண்டும் சற்குருதேவா (சற்)

பூமியில்பி றந்து விட்டேன் சற்குருதேவா—தூய
புண்யமொன்றும் செய்த றியேன் சற்குருதேவா
காமக்குழி னின்றும் தூக்கி சற்குருதேவா—என்னைக்
காத்தருள வேண்டாமோநீ சற்குருதேவா? (சற்)

உன்னடைக்க லமே யன்றோ சற்குருதேவா—என்றன்
உடல்பொருள்ஆளாவி யெல்லாம் சற்குருதேவா
நின்னையேநம் பியிங் குள்ளேன் சற்குருதேவா—மேலாம்
நிட்டையினைக் கூட்டி வைப்பாய் சற்குருதேவா (சற்)

சோதனைகள் செய்யேலையா சற்குருதேவா—நின்றன்
தொண்டன்துன்ப மெய்த லாமோ சற்குருதேவா?
பேதமின்றி யேயெங்கணும் சற்குருதேவா—பர
ப்ரம்மவொளி காணச் செய்வாய் சற்குருதேவா (சற்)

ஆன்மவொளி காணச் செய்வாய் சற்குருதேவா—ஒப்பில்
அன்பமுதை நல்கிடுவாய் சற்குருதேவா
மேன்மையை விளக்கி டுவாய் சற்குருதேவா—என்னை
மெய்ச்சுகத்தி லாழ்த்தி டுவாய் சற்குருதேவா (சற்)

ஓம்சற்குரு ஓம்சற்குரு ஓம்சற்குரு ஓம்ஓம்
ஓம்சற்குரு ஓம்சற்குரு ஓம்சற்குரு ஓம்ஓம்.

யாம்சற்றும் நினைக்காமல் இருந்தாலும்மெய் யன்பால்
தீஞ்சொற்களி னால்செந்நெறி செப்பற்கென வந்தாய் (ஓம்)

உண்டோஇலை யோஎன்பவர் உணரும்படி நேரில்
கண்டேகண பதிபேரருள் கடிதெய்தினை பாரில் (ஓம்)

குன்றாத்தவ மென்னுந்திறல் கொண்டேபுலன் வென்றாய்
என்றுந்திரு வருளேதுணை எனநம்பிடு கென்றாய் (ஓம்)

அருளால்நிகழ் கிறசட்டம் அறிந்தாய் உயிரெல்லாம்
தெளுஞ்ஞற்றிடத் தந்தாய்அதில் சேர்த்தாய் எமையெல்லாம்

சட்டத்தை யனுட்டிக்கஓர் தனியாற்றலை யருள்வாய்
மட்டற்ற வினைநோய்களை மாய்த்தின்பமே தருவாய் (ஓம்)

நிட்டைஎனும் ஒருதன்மையில் நிகரில்நிலை யருள்வாய்
கட்டுக்களை வெட்டிச்சுகக் கரைசேர்த் தருள்புரிவாய் (ஓம்)

(வேறு)

ஓம் குருநாதா ஓம் குருநாதா
ஓம் குருநாதா ஓம் ஓம் ஓம்
ஓம் குருநாதா ஓம் குருநாதா
ஓம் குருநாதா ஓம் ஓம் ஓம்.

தீங்குள யாவும் நீங்கிடு மாறோர்
செந்நெறி கூற வருவாயே;
ஏங்கிவ ருந்தும் என் துயர் தீர்த்தே
இன்னரு ளமுதம் தருவாயே. (ஓம்)

அன்பில் அரும்பி இன்பம் வழங்கும்
அறிவொளி தரநீ வருவாயே;
என்பொறி புலனை வென்றுயர் நெறியால்
இறையொளி காண அருள்வாயே. (ஓம்)

வினையிரு ளொழிய எவை திதய மலர்
விரிய அருளொளி தருவாயே;
கனை கட லமுதந் தனிலுயர் வுறுமோர்
கருணை நல் அமுதை அருள்வாயே. (ஓம்)

வேதம் அனைத்தும் ஓதிடும் உண்மை
விளக்கம் உணர்த்தி அருள்வாயே;
ஆதியொ டந்தம் ஏதுமி லாப்பே
ரானந் தத்தை அருள்வாயே. (ஓம்)

## லாலி

பூதலத் திற்சி றந்த—பிறவியாம்
புனிதமா னிடசென் மமே
தீதிலா திதையெ ணமல்—மனிதர்கள்
தீய நெறி யில்பு குந்தே
சாதலும் சென்மித் தலும்—தொழிலாக
சகட வுருள் போல்சு ழன்றே
மா துயர்ப் படுதல் நீக்க—சட்டமும்
வகுத்த குரு நாத லாலி.

ரத்தினக் குவிய லாதி—பொருளெலாம்
ரக வாரி மேவி னும்
மெத்தஎழி லான மடவார்—குழுவினுள்
வீற் றிருந் தாலு மிதயம்
சுத்தமாய்ப் பற்றி லாமல்—திகழவே
தூய நெறி நல்கு திறலோய்
வித்தகப் போத ஞானப்—பலகைமேல்
விழி துயின் றருள்க லாலி.

ணகரமே போலெ னுடலைத்—திறனுற
நன்ருய் வணக்கி யருள் வாய்
அகமும் வாக் குச்செ யல்களும்—தூய்மையாய
அமையத் திருத்தி யருள் வாய்
இகமுடன் பரமு நல்கும்—நெறியினில்
இனிதே நடத்தி யருள் வாய்
சுகமெனும் துரிய வெளியில்—தூங்காமல்
தூங்கு குரு நாத லாலி.

ஞான மார்க் கத்தை யெளிதாய்—உயிர்கட்கு
நல்கிட வுதித்த தேவா
தானதர் மங்க ளோங்கும்—இல்லறம்
சன்மார்க்க மும் தரு மென
ஊனமில் லாநெறி யினைக்—கைக்கொள்ள
உபதேச மொழிக ளருளும்
மோனசற் குருமூர்த் தியே—தவமிகும்
முனிராச யோகி லாலி.

நன்மையிது தீமை யிதென—அறியாமல்
நரர்கள்படு துயர்பொ றுதே
புன்மைதவிர் நெறியை யார்க்கும்—தந்திடப்
புனிதமன தோடு நோக்கிக்
கன்மனதும் நன்று கரையத்—தக்கவழி
காசினிக் கருளு மேலாம்
தன்மைநிறை ஞான முனிவா—தூயவுப
சாந்த ஸ்வரூப லாலி.

குற்றமில் சாத்த னூரில்—திருவருட்
கொடியைநாட்டியகுரு பரா
நற்றவத் தின்னொளி மிகும்—பிள்ளையார்
நகர் அருள் விலாச அன்னை
சுற்றமும் தாய்தந்தை யும்—குருதெய்வம்
துணையும்நீ யென்று போற்ற
உற்ற அருள் நிலையை நல்கும்—நாதனே
உயர்ஞான முனிவ லாலி.

ருத்திரன் விஷ்ணு பிரமன்—சிற்சக்தி
ரூபமெல் லாமு மெய்தும்
புத்தனொடு நபி நாயகன்—ஏசுவாய்ப்
புவிமீதில் வந்து தோன்றும்
சித்தியொடு புத்தி நல்கும்—யாவுமாய்த்
திகழ்பரப் பிரமம் ஒன்றே
தத்துவ விசார முறையால்—அறிகெனச்
சாற்று குரு தேவ லாலி.

நேசமிகு கோவை நகரில்—அன்புடன்
திகழ்முத்து சாமி பிணியை
மாசிலா தகல வேட்டி—அவரில்லில்
மாண்புற அமர்ந்த மணியே
காசினியில் பலபதி களில்—சென்றருளி
கணபதிக் கோயில் நிறுவும்
தேசிகா ரெட்டிப் பட்டி—நகர்வந்த
சிவயோக முனிவ லாலி.

வானவர்கள் முனிவர் மண்ணோர்—யாவரும்
வணங்க அருள் பொழியும் நாதன்
ஞானகண பதிஉரு வைியே—அன்பர்கள்
நாடித் துதிக்க வைத்தாய்
தீன ரக்ஷகன் அருளினை—எளிதிலே
செவ்வையா யெய்த வைத்தாய்
தேனெனப் போத அமுதை—உண்டுண்டு
திகழ்மோன முனிவ லாலி.

வாதபித் தம்ஸ்லேஷ்ம மாம்—நாடிநோய்
மாசில்நின் பெயர்சொல் லினும்
கோதிலா நீறு தீர்த்தம்—கொடுப்பினும்
குணமாவ தாச்ச ரியமோ?
ஓதுவெம் பிறவி நோயும்—விடைபெற்று
ஓடுமெனில் நின்மகி மையும்
ஆதிமூர்த் தியின்மகி மையும்—பெரிதுகாண்
ஆசார்ய ஸ்வாமி லாலி.

அடிவரவு: பூரண ஞாந குரு தே வா வா.

---

''மன்னு புகழ் கௌசலை தன்'' என்ற மெட்டு.

(எண் வரிசை)

ஒன்றதுவே மெய்ப்பொருளென் றுண்மையுணர்ந் தருளறி
நன்றடைதற் கானநெறி நவின்றருளும் நாயகனே [வை
இன்றும்பின துபதேச இயல்பறிந்தே கடைப்பிடிப்போர்க்
கென்றும்நலம் ஈந்தருளும்என் குருவே கண்வளராய்.

**இருவினையைத்** தகர்த்தெறிந்தே இன்பவழி யேகுதற்குக்
கருணையுடன் சட்டமதைக் காசினியோர்க் களித்தவனே
அருமறையும் சாத்திரமும் ஆய்ந்தாலும் காணறியாப்
பெருநெறியைக் காட்டியருள் பெருமானே கண்வளராய்.

**மும்மலவா** தனையகற்றி முத்திநெறி யினைச்சாற்றி
மம்மரெலாம் தீர்த்தருளும் மாமருந்தாம் பேரருளின்
செம்மையுணர்த் திடவருமோர் தேசிகனே தமியேனை
இம்மையிலே ஆண்டகத்துள் ளினிப்பவனே கண்வளராய்.

**நாலுமறை** களும்புகலும் நாதனருள் மகிமையினை [தும்
ஞாலமுளோ ருணர்ந்தறிவால் நாடும்நெறி தனையுணர்த்
சீலமிகு மேலவனே சீரியனே மூன்றுவகைக்
காலமுடன் கற்பனையும் கடந்தவனே கண்வளராய்.

**ஐம்புலனும்** செலும்வழியில் ஆன்மாக்கள் செல்லுதலால்
துன்பமுறல் கண்டிரங்கித் தூயநெறி யினையெளிதாய்
அன்புடனே நவின்றருளும் அற்புதனே விற்பனனே
என்பவத்தைத் தீர்க்கவரும் இன்னமுதே கண்வளராய்.

**ஆறுதா**ரங்களிலும் அமர்ந்தொளிசெய் யருட்சுடரை
மாறாத சிந்தையுடன் வந்தனைசெய் யும்முறையைத்
தேறாத மாந்தர்கள்தம் தீவினைகள் தீர்த்தெளிதே
ஏறாத மெய்ந்நிலையில் ஏற்றிடுவோய் கண்வளராய்.

**எழுபிறவிக்** கடல்களையும் எளிதுகடந் திடுவதற்கு
வழிபுகன்றே துரியநிலை வழங்கவரு குருபரனே
பழமையுடன் புதுமையுமாம் பரமானந் தச்சுவைசேர்
பழமருந்தும் விழுமியனும் பண்பினனே கண்வளராய்.

**எட்டுவகைச்** சித்தியெலாம் எய்திடினும் மெய்ஞ்ஞானம்
மட்டும்உண ராவிடில்அம் மனிதன்உயர்ந் தோனாகான்
நிட்டையினை யனுசரித்தே நினைவகற்றி இன்பமுறச்
சட்டமிதைக் கொள்கவெனத் தந்தருள்வோய் கண்வளராய்.

ஒன்பதுரத் தினங்களையும் உயர்மலைபோல் குவித்திடினும்
இன்பமதை யெய்திடுதற் கெவராலும் இயலாதென்
றன்புடனே ஞானமெனும் அற்புதரத் தினம்கொடுத்துச்
செம்பொருளை யுணர்த்தியருள்சிவயோகி கண்வளராய்.

பத்துவகைத் தீக்குணமும் பற்றுமே காத்தருள்வாய்
சித்தமதில் சொல்செயலில் சேர்மாசு நீக்கிடுவாய்
உத்தமநன் னெறியினிலே ஒருபற்று மின்றியெனை
நித்தமுமே நடத்திடுவாய் நீயெனுளே கண்வராய்.

## ஊஞ்சல் (உயிர்க்குறில் தொடை)

அருளறிவுப் பெருங்கடலை உலக மாந்தர்
அணுகிடுதல் வேண்டுமென அகத்துட் கொண்டே
அருமறையும் ஆகமமும் கலைகள் யாவும்
அலகில்புரா ணதியும்சொல் கின்ற நுட்பப்
பெருநெறியை யெளிதெவரும் பேணு மாறே
பேதமிலாச் சட்டம்வகுத் தளித்த நல்லோய்
துரியாதீ தத்தினில்தூங் காமல் தூங்கும்
தூயஅருட் குருபரனே ஆடீ ரூஞ்சல்.

இகசுகமும் பரசுகமும் இனிதே யெய்த
எளியநெறி யினையெவர்க்கும் ஈந்த மேலோய்
பகலிரவும் நினைப்புமறப் புங்க டந்தே
பரவெளியில் இனிதுலவு கின்ற சுத்த
சுகமோன முனிவரனே தூய சாந்த
சொருபசுயம் பிரகாச சோதி தன்னை
அகமதிலேற் றெவ்வுயிர்க்கும் அளிக்கும் தூயோய்
ஆனந்த வொளிமிகவே ஆடீ ரூஞ்சல்.

உத்தமநன் னெறியினையே உலகிற் கீந்தாய்
ஒருபற்று மில்லாமெய் யுருவிற் போந்தாய்
சுத்தமனோ லயவெளியைக் காணச் செய்தாய்
தூயவுளத் தினில் அருளாம் மழையே பெய்தாய்
இத்தரையுள் எத்தனையோ ஊரில் சென்றாய்
எவ்விடத்தும் திருவருளால் இனிதே வென்றாய்
முத்தரெலாம் வாழ்த்தவொளிர் முனிவா ஞான
மொழியருளும் குருநாதா ஆடீ ரூஞ்சல்.

எங்குநிறை மெய்ப்பொருளி னருள்பெற் றோங்கும்
எனதுகுரு நாதா இப் பரத நாட்டில்
தங்கியொளி ருயிர்களுக்குச் சேவைசெய்தே
சாந்திபெற வோர்வரம்நீ தரவே வேண்டும
துங்கமுனி வரர்குழுவில் துலங்கு ஞான
சுகவடிவே துரியாதீ தத்தில் பொங்கும்
கங்குகரை யெதுவுமிலாக் கருணை யென்னும்
கடலமுதைத் தருதுணையே ஆடீ ரூஞ்சல்.

ஒருமொழியை யுணர்த்திடவே யுளத்துட் கொண்டாய்
உலகமவ னுருவெனுமோர் உண்மை கண்டாய்
அருமறையி னுட்பொருளை யெவர்க்கும் தந்தாய்
அறியாதார் படுமிடரை யறிந்தே நொந்தாய்
கருமபலன் கடவுளுக்கர்ப் பணமாக் கிட்டால்
கஷ்டமணு காதெனவே உபதே சித்தாய்
தருமநெறி யுணர்மேலோர் சாற்றும் நூலின்
சாரமளித் திடுகுருவே ஆடீ ரூஞ்சல்.

**எச்சரிக்கை** (சுட்டெழுத்தணி)

அறிவாலறி கிறமேலவ ரறிவுக்கறி வாகி
அருளாரொளி யுடனுள்ளொளி ரானந்தமு மாகி
குறியோடுறு குணமுங்கடந் திலகும்பொரு ளாகிக்
கூறும்பல பேதங்களு மில்லாநிலை யாகி
சிறியோர்பெரி யோர்யாருளு மிளிர்மெய்யொளி யாகித்
திகழும்பல அண்டங்களி னுதாரமு மாகி
பொறியோடுபு லன்காணறி யாநற்சுக மான
பொருளைத்தரு கிறசற்குரு நாதாஎச் சரிக்கை.

இதமாகமெய் யடியார்களி னிதயந்தனை நாடி
இன்பக்கனி தருபக்தியெ னும்வித்தினை யூன்றி
மதமாச்சரி யங்காமமு லோபஞ்சின மாதி
மட்டறவெழு களையாவும் அகற்றிப்பரி வோடும்
பதமாகமெய் யார்வந்தனைத் தெண்ணீரெனப் பாய்ச்
பண்போடுவ் ளர்த்துப்பல னும்மெய்யரு ளூட்ட[சிப்
நிதமும்பல ஊர்சென்றரு ளுரைகூறிடு நாதா
நிறையன்புரு வார்சற்குரு தேவாஎச் சரிக்கை.

உலகம்பல பலவாகியு முயிர்பற்பல வாயும்
ஒளிர்மெய்ப்பொரு ளருளேயெளி தினில்யாவருமெய்த
நலமுற்றதொர் முறைசட்டமெ னத்தந்த தயாளா
ஞாலந்தனி லருள்நோக்கொ டுதித்திட்ட குணாளா
பலகுற்றமு மன்னித்தருள் நல்கும் கருணாளா
பாவத்தரு வேரோடுப றிக்கும்மழு வாளா
அலகில்சுக வடிவோடுள மேவுந்திற லாளா
ஆனந்தசொ ரூபாகுரு மூர்த்தீஎச் சரிக்கை.

---

## மங்களம்

(இங்கிலீஷ் நோட்)

மங்கள மெனப் பாடுவோம்
மறைமு தலருள் நாடுவோம்
மடமை யிருளைக் களைந்து மனத்துள
மருவு மொளியைத் தேடுவோம். (மங்க

துங்க வொளியைக் காணுவோம்
தூய நெறியைப் பேணுவோம்
சுமுக முடனே சுஜன ருடனே
சுகுணப் பணியைப் பூணுவோம் (மங்க)

இங்கி தமுடன் வாழுவோம்
எங்கும் அன்பொடு சூழுவோம்
இயற்கை யையடக் கிடுரெட் டிப்பட்டி
இருடி யருட்குள் ஆழுவோம் (மங்க)

சங்கமதனில் மேவுவோம்
சத்யத் துக்கலர் தூவுவோம்
சங்க டமனைத் துந்த விர்த்தருள்
சாந்தித் கரைக்குத் தாவுவோம். (மங்க)

(வேறு)

மங்கள மெங்கள்குரு நாதர்க்கும் கணேசர்க்கும்
எங்குமெவ் வுயிர்களுக் கும்

கங்கை முதற்குமரி காறும்யாத் திரைசெய்து
துங்கநெ றியையார்க்கும் சொற்ற குருநாதர்க்கும்
தங்கு தடைகளற்ற தண்ணருட் கடலான
ஐங்கரத் தேவருக்கும் அன்பாய்மங் களமென்போம்.
(மங்க)

துன்பம னைத்துந்தவிர் தூயசட் டத்தைத்தந்து
புன்பவ வினைமாய்த்த புண்ய வுருவாளர்க்கும்
இன்பக்க டலமுதை இனிதேயன் பர்க்குநல்கி
என்பிறப் பொழிப்போர்க்கும் என்றும்மங்
களமென்போம். (மங்க)

(வேறு)

சற்குருவாம் நாதருக்கு ஜெயமங்களம்
சண்முகர்ச கோதரர்க்கு சுபமங்களம்
சொற்களங்க மற்றவர்க்கு ஜெயமங்களம்
தூயசக்தி மைந்தருக்கு சுபமங்களம்.

இரெட்டிப்பட்டி ஸ்வாமிகட்கு ஜெயமங்களம்
இபமுகக் கடவுளுக்கு சுபமங்களம்
அருட்சுக மளிப்பவர்க்கு ஜெயமங்களம்
ஐங்கரக் கணபதிக்கு சுபமங்களம்.

அன்பமுத ருள்பவர்க்கு ஜெயமங்களம்
ஆரணமு தல்வருக்கு சுபமங்களம்
இன்பொளிவ ழங்குவோர்க்கு ஜெயமங்களம்
எவ்வுயிர்க்கும் நாதருக்கு சுபமங்களம்.

தத்வநிலை காட்டுவோர்க்கு ஜெயமங்களம்
சத்தியசொ ரூபருக்கு சுபமங்களம்
சத்வகுணம் நல்குவோர்க்கு ஜெயமங்களம்
சாந்தவடி வாளருக்கு சுபமங்களம். (சற்குரு)

ஓம் சற்குரு.



ஓம் கணபதி

# பர வணக்கம்

அனைத்தையும் அளித்தாய் அனைத்திலும் அமர்ந்தாய்
அனைத்தையும் இயக்கு கின்றாய்
அனைத்தையும் உகந்தாய் அனைத்தினு மிருந்தாய்
அனைத்தையும் நிகழ்த்து கின்றாய்

அனைத்தையும் விளைப்பாய் அனைத்தையும் அழிப்பாய்
அனைத்துமே மாற வைப்பாய்
அனைத்தையும் விடுப்பாய் அனைத்தையும் எடுப்பாய்
அனைத்தையும் நினைப் பூட்டுவாய்

அனைத்தையும் கண்முனே காட்டுவாய் உடனே
அனைத்தையும் மறைத்து விடுவாய்
அனைத்தையும் மறந்திடச் செய்வாய் நலம்பெற
அனைத்தும் திருத்தி யருள்வாய்

அனைத்தையும் நினைத்தழும் எனக்குநின் அருட்பதம்
அளித்தாண் டருள் புரிகவே
அனைத்திலும் அனைத்துமாய் வேறுமாய் உடனுமாய்
அமருமொரு கருணை யொளியே.

நீதந்த திவ்வுலகம் நீதந்த தெப்பொருளும்
நீதந்த தென்ற னுடலும்
நீதந்த தென்னறிவு நீதந்த தென்கரணம்
நீதந்த தென்பொறி யெலாம்

நீதந்தி ராவிடில் எனக்கேது கூறுவாய்
நின்னரு ளிலாது போனால்
நீளுலக மேதுயான் அதிலுறுவ தேதெலாம்
நின்னருளி னுடலன்றோ?

ஏதங்க ளேசெயினும் இனியசெயல் செயினுமவை
யான்செய்த செயல்க ளன்றே
என்னுயிர்க் குயிராய்என் அறிவினுக் கறிவாகி
எனைநீ நடத்து கின்றாய்

போதந்த னைத்தந்து காவாமல் என்னைஏன்
புன்னெறியில் உந்து கின்றாய்?
பூரணப் பொருளே துணைபிறிது காணேன்
புரந்தருள்க கருணை யொளியே.

# விநாயகர் தோத்திரம்

(கட்டளைக் கலித்துறை)

அன்புருக் கொண்டொளிர் அண்ணலே
ஐங்கரக் கற்பகமே
புன்புலால் யாக்கையின் பொய்ச்சுகம்
வேண்டாத புண்ணியர்தம்
துன்பெலாம் நீக்கிமெய்ச் சோதியின்
பம்தரும் தூமணியே
என்பிழை யாவும் பொறுத்துஞா
ஞனந்தம் ஈந்தருளே. 1

சந்தமும் சீரும் தளைகளும்
சேர்த்துன தாள்மலர்க்கே
சந்தத மும்தூய பாமாலை
சூட்டச் சதுருடனே
சுந்தர மாம்தமிழ்ச் சொற்களைத்
தந்து துணைபுரிவாய்
கந்தன் மகிழும் துணைவனே
ஞான கணபதியே. 2

தீயதாம் காமப் படுகுழி
ஆழ்ந்து திகைக்கஎனை
நீயிவண் விட்டிடில் வேறுமற்
றார் துணை நேத்திரமும்
காயமும் வாக்கும் மனமும்
கணபதீ நின்றனையே
நேயமாய் நாடிடச் செய்தெனைக்
காத்தருள் நித்தியனே. 3

ஆசைக் கடற்குள் அழுந்தி
அறிவழிந் தேங்குமெனை
நேசத் தொடுதடுத் தாண்டருள்
ஈயுநாள் நேர்வதுண்டோ?
பாசத் துடன்அங்கு சம்தாங்கு
கையனே பாங்குடன்என்
பாசத் தினைத்தவிர்த் தேஅருள்
நல்குவாய் பண்ணவனே. 4

சிந்தையும் சொற்களும் செய்கையும்
சேர்ந்தொருங் கிற்கலந்தே
அந்தமொ டாதியில் லாநின்
அருளியல் பைக்குறித்தே
சந்தத மும்தொழு தேத்திடற்
கோர்வரம் தந்தருள்வாய்
தந்தி முகம்கொள் தயாபர
னேஞான சாகரனே. 5

இயற்கைக் கவினே இளமையே
எண்ணில் கலைகளும்செய்
செயற்கைத் திறனே நுதலின்
நடுவில் திகழ்ஒளியே
அயிற்கைக் குகன்மகிழ் சோதர
னே இவ் வவனியிற்பொய்ம்
மயக்கைத் தவிர்த்தருள் எய்த
எனக்கோர் வரம் அருளே. 6

சுனைநீரி னிற்செழித் தோங்குபுல்
லைப்போல் துளிர்விடுத்து
முனைநாள் பெரியோர்கள் ஈட்டுநற்
செல்வம் முனைந்தழித்தே
மனமா சுடன்அலைந் தேங்குமென்
னைநின் மலர்க்கணினால்
கனிவோடு நோக்கி அருள்தரு
வாய்எம் கணபதியே. 7

பாரினிற் பெண்ணாசை மேற்கொண்
டுழலுமிப் பாவியையும்
சீரடித் தொண்டனாய்ச் செய்திடு
வாய்பேதை செய்பிழையைப்
பேரரு ளாற்பொறுத் தாண்டருள்
வாய்நின் பெருமையெலாம்
நேருறக் கூறஎன் நாவொன்று
போதுமோ நித்தியனே? 8

காமப் பெரும்பேய் வசப்பட்டு
நாளும் கவலையுடன்
தீமைக் குணங்களோ டேகொடுஞ்
செய்கைகள் செய்துசெய்து
பூமிக்கு வீண்சுமை யாய்க்கிடக்
கின்றவிப் புல்லனையுன்
நாமஞ் செபிக்குநற் றொண்டனாய்ச்
செய்தருள் நல்குகவே. 9

பொல்லாத காமப் படுகுழி
வீழ்ந்து புலம்புமென்னை
நல்லோர் வணங்குநின் பொன்னடிக்
குத்தொண்டு நன்றுசெய்யச்
சொல்லா திருத்தலும் சும்மா
இருந்திடும் தூயமௌனம்
நல்கா திருத்தலும் நீதியா
மோவேத நாயகனே? 10

படியாப் பிழையும் பரிவுடன்
பாடிப் பரவிநிதம்
துடியாப் பிழையும் துகளற
நாடித் தொழுதுகண்ணீர்
வடியாப் பிழையும் வணங்காப்
பிழையும வசமழிந்தே
நடியாப் பிழையும் பொறுத்துல
வாஇன்பம் நல்குகவே. 11

சொல்லால் வருபிழை செய்கையி
னாற்பிழை தூய்மையொன்றும்
இல்லா நினைவால் வருபிழை
யாவும் இனிது பொறுத்
துல்லா சமதாக என்றனை
உன்னருளாம்வெளியில்
நல்லா ருடனமர்த் திக்கொடுப்
பாய்ஞான நல்லமுதே. 12

மனமெனும் பேயின் வசப்பட்
டுழலுமிவ் வஞ்சகனைத்
தினதினம் சோதனை செய்திடேல்
என்றன் சிரமிசையே
நினதிரு தாள்மலர் சூட்டிடு
வாய்உன் நிசவுருவோ
டனுதின மும்காட்சி தந்தருள்
வாய்எங்கள் ஆண்டவனே. 13

மனந்தனி லேநன் கரும்பி
மலர்ந்த மணமலரில்
தினந்தொறு மேஞான த் தேன்துளி
சிந்தச் சிவமயமாய்க்
கனிந்து தமியேன் கடைத்தேறும்
மார்க்கம் கருதிநிதம்
புனைந்து தமிழ்மாலை சூட்ட
வரம்தா புராதனனே. 14

தேனே நறுஞ்சுவைப் பாலே
இனித்திடும் தெள்ளமுதே
ஊனே உயிரே உணர்வே
உணர்வுள் ஒளிமயமே
கோனே குணம்குறி யாவும்
கடந்த குருபரனே
வானே நிலனே அறிவரி
யாய்என்முன் வந்தருளே. 15

கலையே கலைகளின் உட்பொரு
ளேயாரும் காணறியா
நிலையே சதானந்த ரூபமே
ஞான நிறைகடலே
மலையே மதிக்கவொண் ணாமா
மணியே மனந்தனையிங்
கலையா வணமே புரிந்தருள்
வாய்எங்கள் ஆண்டவனே. 16

சிந்தையே கோயிலாக் கொண்டவ
னேதேவர் சித்தரெல்லாம்
எந்தையே என்ன இறைஞ்சிட
நல்வரம் ஈபவனே
தந்தையே தாயே குருதெய்வ
மேதீமை சார்பவமாம்
முந்தைநோய் வேகஞா னத்தீ
அளிப்பாய் முழுமுதலே. 17

பல்லுல கங்களாய்ப் பல்லுரு
வங்களாய்ப் பல்லுயிராய்க்
கல்லினில் திண்மையாய்ச் சொல்லில்
பொருளாய்க் கருத்திலொன்றாய்
நல்லவர் நாட்டத்தி னில்தோன்று
சோதியாய் ஞாலமுள்ளோர்
எல்லவர்க் கும்தரு வாய்ப்பொலி
வோய்எற் கிரங்குகவே. 18

பதிநீ எனவுணர்ந் தன்பினால்
பூசை பரிந்துசெயா
துததி உடையாக்கொள் இப்பாரில்
வீணே உழலவைத்தாய்
இதுவோ உனதருள் என்றேங்கு
கின்றேன் எனக்குநல்ல
கதியீந் தருள்செய்க வேறு
துணைபெவர் காண் எனக்கே. 19

பெண்ணாசை மேற்கொண்டு பீடழிந்
தேங்கினேன் பின்புமெனை
மண்ணாசை யும்பசும் பொன்னாசை
யுங்கூடி வாட்டுதையோ
எண்ணாத எண்ணமெல் லாமெண்ணி
ஏங்கும்இவ் வேழையேன் உட்
கண்ணால் உனதருட் காட்சியைக்
கண்டிடக் காட்டுவையே. 20

ஓதிக் கலைகள் உணர்ந்தறி
யேன் இவ் வுலகினிலே
சாதுக்க ளைத் துணை சார்ந்தறி
யேன்மிகத் தந்திரமாய்ச்
சூதுக்க ளைப்புரிந் தேமாற்றி
யேமனம் சோர்ந்தழிந்தேன்
ஏதுக்கு நான்பிறந் தேனோ
அறிந்திலன் ஈச்சுரனே. 21

பெற்றதா யாரையும் பேணிடற்
கெண்ணேன் பிரியமுடன்
கற்றுணர்ந் தோரைக் கருதிலேன்
நின்கழற் கால்துணையைப்
பற்றிலேன் திவினைப் பாழ்குழி
வீழ்ந்து பதறுகின்றேன்
நற்றவர் போற்றிடும் நாயக
னே அருள் நல்குகவே. 22

உலகென்ப தென்னென் றுணராமல்
ஏமாந் துழன்றலுத்தேன்
பலரும் பழித்திடப் பாழுடம்
போம்பினேன் பக்தியில்லேன்
கலகங்கள் மூட்டிவீண் சண்டையுண்
டாக்கினேன் காமமெனும்
வலையில் பிடிபட்டு ளேன்எனை
மீட்கநீ வந்தருளே. 23

வாடிக் கலங்கி வருந்துகின்
றேன்வைய மாயைஎனை
நாடிப் பிடித்து நவிலற்கொ
ணாத நடலையீந்தே
ஓடித் திரியத் துரத்தல்நன்
றோதடுத் துன்புகழைப்
பாடித் துதித்துய்ய ஓர்வரம்
ஈவாய் பரிந்தெனக்கே. 24

இன்பே உருக்கொண்ட ஈசனே
எங்கும நிறைந்தொளிரும்
உன்பே ரருள்மறந் தூன்பேணி
ஊணுன் டுறங்கிநிதம்
துன்பே அடைந்து வருந்திடும்
பேயன்நின் தூமலர்த்தாள்
அன்போடு போற்ற வரங்கொடுத்
தாண்டருள் நல்குகவே. 25

வாழ்வினை நன்கு நடத்துதற்
கான வகையறியேன்
சூழ்வினைக் கட்டை அறுத்துத்
தொலைக்கத் துணிந்தறியேன்
பாழ்படும் என்றன்வாழ் நாளை உன்
பக்தியின் பாற்படுத்தி
ஏழ்பிற விக்கட லைக்கடத்
தாய்வர்மம் ஏன்உனக்கே? 26

வேதம் விளக்கிடும் வேதாந்த
ரூபனே விண்ணவர்முப்
போதும் தொழுது புகழ்ந்தேத்தும்
ஐயனை பூவுலகில்
ஏதம் தவிர்த்தன்பர் கட்கின்பம்
ஈந்தருள் எந்தையேநின்
பாதங் களுக்குநற் பாமாலை
சூட்டப் பணித்தருளே. 27

கல்லா தவர்களும் நல்லோர்க
ளாயினர் கற்றறிந்தும்
பொல்லா நெறியில் நடந்தேன்
எனினும்நின் பொற்பதத்தை
பல்லா தொருபெரும் ப்ற்றினைக்
கண்டிலேன் அம்புவிமேல்
எல்லாரும் ஏத்திடும் ஈச்சுர
னே இன்பம் ஈந்தருளே 28

பணத்தைப் பெரிதென்ன எண்ணிவாழ்
நாளையும் பாழ்படுத்திக்
குணத்திற் கருத்தைச் செலுத்தாம
லேகொடுங் கோபமீறிக்
கணக்கற்ற பாவங்கள் செய்யுமிப்
பாவியைக் காசினிமேல்
உணற்கும் உறங்கற்கும் ஏன்விதித்
தாய்எங்கள் உத்தமனே? 29

என்மனந் தன்னையிவ் வாறுபொய்ம்
மாயையுள் ஏகவிட்டே
துன்மதிக் காளாக்கி யேஇங்கு
சோதனை நீபுரிந்தால்
புன்மய லுற்று வருந்துவேன்
என்னைப் புரந்தருள
நன்மனத் தோர்போற்றும் நாதனே
நின்னுளத் தெண்ணுகவே. 30

பாவச் செயல்களைச் செய்யவொண்
ணுதெனப் பாரிலுளோர்
யாவர்க்கு மேமறை கூறுமே
நின்னரு ளின்றியென்னல்
யாவர்க்கெத் தீங்கு செயஇய
லும்சொல்க என்பிழைகள்
யாவும் பொறுத்தருள் ஈயக்
கடன்உனக் கீச்சுரனே. 31

ஞானமாம் சாகர மேஅரு
ளைப்பொழி நன்முகிலே
பானுவே தண்மதி யேஅங்கி
யேசிற் பரஅமுதே
வானமே காற்றே அனைத்தும்
கடந்தொளிர் வான்பொருளே
ஏனெனக் கின்னும் திருவருள்
ஈந்திடத் தாமதமே? 32

மரமே கிளையேபைங் கொம்பே
இலையே மணமலரே
உரமார்ந் திலகுநற் காயே
கனியே உயர்மதுவே
சரமே தனுவே சகல
கலைகளின் சாரமுணர்
வரமே கொடுத்தெனை ஆண்டருள்
வாய்நான் மறைமுதலே. 33

அணுவுள் அணுவாகி எங்கும்
நிறைந்தொளிர் ஆண்டகையே
கணுவின்றி எங்கும் இனிக்கும்
கரும்பே கருதியுனை
அணுகும் விருப்புட னேஅருட்
பாடல்செய் தன்புகொண்டே
உணுமுன் தினமும் வணங்கி
உயஎற் குணர்த்துகவே. 34

ஒலியாய் எழுத்தாய்ப் பதமாய்
உரையாகி வாக்கியமாய்க்
கலையாய்க் கலைகள் பலவும்
விளக்கிடக் காசினியில்
பலநூல் களுமாய் அவற்றில்
பொதிந்துள்ள பல்கருத்தாய்
இலகும் பிரானே அடியேற்கு
மெய்ஞ்ஞானம் ஈந்தருளே. 35

கலையாய் விளக்கம் அளிக்கிறாய்
மேலாம் கருணையொடே
மலையாய் மருந்து வழங்குகின்
றாய்நன் மரமெனவாய்
இலைபூ கனிகாய் நிழல்விற
காதி இனிதளித்தே
பலவாற்றி னாலும் உதவுகின்
றாய்எம் பராபரனே. 36

எங்குநின் றன்முகம் எங்குநின்
றன்கரம் எங்குநின்கால்
எங்குநின் நேத்திரம் எங்குநின்
றன்செவி எங்குநின்வாய்
எங்குநின் பேரழ கெங்குநின்
பேரொளி எங்கும்நின்பேர்
எங்குநின் றன்மயம் ஆதலால்
யான்என் இயம்புவதே! 37

யாவுநீ காண்கிறாய் யாவுநீ
காண்கிலாய் எங்குமாகி
யாவுநீ கேட்கிறாய் யாவுநீ
கேட்கிலாய் எங்குமேவி
யாவுநீ செய்கிறாய் யாவுநீ
செய்கிலாய் என்றுமெங்கும்
யாவுமாய் அல்லவாய் மேவுநின்
மெய்த்திறம் என்வியப்பே. 38

எல்லா வுலகும் படைத்தளித்
தேஅழித் தின்னருளால்
எல்லா வுயிர்கட்கும் இன்பம்
கொடுத்தாள்வாய் எங்குமாகி
எல்லாம் இயற்றுவாய் யாதினும்
பற்றற் றினிதொளிர்வாய்
எல்லாம் நினதுரு என்றுணர்
ஞானம்எற் கீந்தருளே. 39

கண்ணாடி யொத்துக் களங்கமில்
லாதொளிர் நன்மனத்தோர்
உண்ணாடி நோக்கி உரைத்தற்
கரும்பே ரொளிவடிவாய்க்
கண்ணாரக் கண்டுனை ஏத்துவார்
யானும்இக் காசினியில்
பெண்ணாசை யைத்துறந் துன்பூசை
பேணிடச் செய்தருளே. 40

மோகம் எனும்வலை யிற்சிக்கி
    யேயுழல் மூடனும்என்
சோகந் தனைத்தவிர்த் தரன்மச்
    சுகம்தர வேநினைப்பாய்
சாகும் பழக்கம் பிறக்கும்
    பழக்கம் தமைத்தொலைப்பாய்
போகம் பலவும் கொடுத்துல
    கெல்லாம் புரப்பவனே. 41

அந்தோ இனும்என் பவம்மாய்த்
    தருளா தவநெறியே
தந்தால் அடியேனும் மெய்யின்ப
    மாம்கரை சார்வதென்றோ?
நந்தா விளக்கே ஒளியே
    அவதிகள் நான்அடைந்தால்
சந்தோ டமும்நினக் காமோ
    புகல்வாய் தயாநிதியே. 42

காண்டற் கினிய கவினே
    கனியே கழைரசமே
வேண்டும் வரமெலாம் அன்பர்க்கு
    நல்கிடும் வித்தகனே
சேண்டங்கு தேவர்கள் போற்றும்
    பிரானே திகழ்அடியார்
பூண்டெங்கு மேதொழும் பாதனே
    என்னைப் புரந்தருளே. 43

எல்லா உயிர்கட்கும் என்னால்
    இயன்றநற் றொண்டுசெய்தே
எல்லா உயிர்க்குள்ளும் நின்னொளி
    கண்டுபே ரின்பமெய்தி
எல்லா நினைவும் மறந்துவா
    ழும்வாழ்வை ஈந்தருள்வாய்
எல்லா வுலகுக்கும் யாவர்க்கும்
    நாதனும் ஈச்சுரனே. 44

நின்னருள் இல்லாமல் யானோர்
துரும்பினை நின்றசைக்கப்
பன்னாள் முயன்றாலும் ஆகுமோ
பண்ணவர் யாவருக்கும்
மன்னு முனிவர்க்கு வாய்த்த
துணைவா மறைநவிலும்
நன்னு வினர்க்கருள் நாதா
உயர்ஞானம் நல்குகவே. 45

எவ்வுயிர் பாலும்மெய் யன்புபூண்
டேதொண் டினிதியற்றச்
செவ்வையாய்க் கொல்லா விரதத்தை
மேற்கொளச் செய்தருள்வாய்
தெவ்வரும் நண்பரும் இன்பமே
எய்தத் திருவருளைத்
திவ்விய மாய்வழங் கெந்தையே
ஞான தினகரனே. 46

பார்க்குள் சிறியனேன் நின்சேவை
காணப் பரிந்தருள்வாய்
யார்க்கும் ஒருதீங்கு மேபுரி
யாமல் இனிதுவாழ்ந்தே
தீர்க்க தரிசியாய் மேவிடச்
செய்தறி வாய்ஒளிர்வாய்
மார்க்கம் அனைத்தும் வகுத்தளிப்
பாய்நான் மறைப்பொருளே. 47

கல்விஇந் நாட்டிற் கடிதில்
வளரக் கருதிடுக
செல்வம்எல் லாமும்இந் நாட்டினிற்
சேர்ந்திடச் செய்தருள்க
பல்வள மும்சிறந் தோங்குநீ
எண்ணிப் பரிந்தருள்க
நல்வரம் எல்லாம் வழங்குதற்
கேமேவும் நாயகனே. 48

கைத்தொழில் யாவும்இந் நாட்டில்
சிறக்கக் கடிதருள்க
எத்துறை ஞானமும் இந்நாட்டி
னர்க்குநீ ஈந்தருள்க
பொய்த்துறை போகாத வண்ணம்
தடுத்தாள்க போதநல்கிச்
சித்தசுத் தம்தந்து காத்தருள்
செய்கமெய்த் தேசிகனே. 49

பஞ்சம்இந் நாட்டில்எந் நாளும்எய்
தாதநற் பண்பருள்க
சஞ்சலம் எல்லாம் தவிர்ந்திடற்
கோர்வரம் தந்தருள்க
அஞ்செனும் பொய்ப்புலன் செல்வழி
செல்லாமல் ஆண்டருள்க
தஞ்சமென் றேயுறும் அன்பர்தம்
வாழ்வே தயாபரனே. 50

திருவும் கலையும் தொழிலும்இந்
நாட்டில் சிறந்தொளிரப்
புரிவாய் அருளறி வீவாய்
புதுப்பொலி வேஅருள்வாய்
இரவும பகலும்இல் லாவாழ்வை
யேயினி தீந்தருள்வாய்
அருளார் திருமுகத் தண்ணலே
நீஇஃ தளித்தருளே. 51

அறியாமை யென்னும் கடலி
லிருந்தெடுத் தாண்டருள்க
நெறியாவு மேசொல்லி மெய்ஞ்ஞானம்
நல்க நினைந்தருள்க
சிறியோர் வறியோர் எனும்பெயர்
இல்லாமல் செய்தருள்க
இறையே இவைவிரை வில்செயல்
வேண்டும்என் றேறத்துவனே. 52

பேராசை யென்னுமோர் பேய்வாயி
னிற்பட் டழிதலின்றி
ஆராத காதலோ டேதூய
கற்பார் அணங்கினைப்போல்
பாரார் உயிர்க்கெலாம் நாதனும்
உன்னைப் பரிவுடன்சேர்ந்
தேராரும் மெய்யின்பம் எய்திவா
ழற்கருள் எம்மிறையே. 53

நின்னைக் கலந்துமெய் யின்பமே
எய்த நினைவெனக்குப்
பன்னெடு நாளாய் இருக்கின்ற
தேஎனைப் பார்த்திடற்கும்
நின்னுளத் தெண்ணிலை போலும்நின்
தண்ணருள் நேர்த்தியிஃதோ?
மன்னுபே ரன்பர்க்கு வாய்த்தநற்
செல்வமே வானமுதே. 54

என்பாதம் நின்கோயி லைநாடி
ஏகுக என்னிதயம்
நின்பாத பத்மங்க ளேதுணை
என்ன நினைந்திடுக
அன்போங்கக் கைகள் குவிக
அருட்பாடல் பாடநல்வாய்
என்பால் அருள்வெள்ளம் நீபெருக்
கென்றே இறைஞ்சுவனே. 55

என்கை நினக்காக எப்பணி
யும்செய்க இந்நிலத்தே
என்கால் தினந்தோறும் நின்கோயி
லைவலம் செய்திடுக
நின்காதை என்செவி கேட்க
நினைக்காண்க நேத்திரங்கள்
என்கோரி னும்கொடுப்பவ
னென்சுனை எண்ணுகவே. 56

எவ்வுயி ருக்கும் உதவி
செயல்வேண்டும் என்கரங்கள்
எவ்வுயி ருக்கும் நலம்செயற்
கெண்ணுக என்னிதயம்
எவ்வுயி ருக்கும்நான் அன்பு
செயல்வேண்டும் எங்கணும்வாழ்
எவ்வுயி ருக்கும் இறைவனே
இவ்வரம் ஈந்தருளே. 57

கல்லாமை என்னும் கடல்தாண்ட
நீயே கடிதருள்வாய்
நல்லார்கள் நட்பினை நாளும்நான்
பெற்றுய்ய நன்கருள்வாய்
எல்லா உயிர்க்குள்ளு மேநினைக்
காண இனிதருள்வாய்
சொல்லால் நினைவால் செயலால்
அறியொணாத் தூயவனே. 58

குழந்தையின் உள்ளமே போன்றநல்
உள்ளம் கொடுத்தருள்க
அழுந்தஎன் உள்ளத்தி லேஉண்மை
யன்பைப் பதித்தருள்க
பழந்தமி ழாற்பல பாடல்யான்
பாடும் பரிசருள்க
உழுந்துருள் போதேனும் உன்னையான்
காணற் குணர்த்துகவே. 59

அறிவே அறிவுக் கறிவே
அருள்பழுக் கும்கனியே
குறியே குணமே கடந்தொளிர்
உண்மையே கூறொணாமெய்ந்
நெறியே நெறிகள் அனைத்துக்கும்
மேலான நித்தியமே
நிறைவே குறைவிலா இன்பம்
கொடுத்தாள்க நின்மலனே. 60

மண்ணாய் மணலாகிக் கல்லாய்க்
சுவராகி மாடிவீடாய்
எண்ணாய் எழுத்தாய் ஒலியாய்
ஒளியதாய் எங்குநோக்கும்
கண்ணாய்ச் செவியாய் மனத்தினை
நன்றே கனிந்திடச்செய்
பண்ணாய்ப் பழம்பாட லாய்ப்பொலி
வோய்நீ பரிந்தருளே. 61

வெயிலிற் கிடக்கச் சகிக்காப்
புழுப்போல் விரிதலத்தின்
மயலிற் கிடக்கச் சகிக்கா
துன தாள் மலரெனும்ஓர்
புயலிற் கசிமழை யாலே
நிறைமடுப் புக்குமூழ்கிச்
செயலிற் குணத்தில் அழுக்கற்
றொளிரநீ செய்தருளே. 62

உணவாய்ப் பசிநோய் தணிப்பாய்
உடையாய்க் குளிர் தவிர்ப்பாய்
பணமாய்ப் பலவாம் உதவி
புரிகிறாய் பாவியேன் ஓர்
கணமா யினும்நின் னருள்மற
வாமல் கருதிடுப நற்
குணமே அருள்வாய் குருபர
னே அருட் குஞ்சரமே 63

மானிட னாகப் பிறந்திடச்
செய்தனை மாநிலமேல்
மானிட ருக்கான நற்குணம்
ஏதும் வழங்கிலையே
ஏனெனக் கிப்பிறப் பைக்கொடுத்
தாயோ இனிதுபுசித்
தானினை யேவளர்த் தற்கோ
புகன்றருள் உத்தமனே. 64

வேதங்க ளோதனன் மந்திரங்
கூற விழைந்ததில்லை
பேதந்த னைநீக்கு ஞானப
தேசமும் பெற்றதில்லை
ஏதந்த விர்த்திடற் கெண்ணிநல்
யோகத் திருந்ததில்லை
போதந்த ருந்தேவ னேஎனக்
கோர்சொல் புகன்றருளே. 65

மாமறை யோதிலேன் மந்திரங்
கற்றிலேன் மல்குமன்பும்
நேமமு நிட்டையும் பேணிலேன்
தூய நெறியறியேன்
பூமியில் வீணாக என்பிறந்
தேனோ புரியவில்லை
சாமிநீ தான்துணை காத்தருள்
ஞான தயாபரனே. 66

ஐயோ புவிமிசை வீணே
அலைந்துழன் றல்லுமெல்லும்
பொய்யாம் பொருள்களின் மீதாசை
மிஞ்சிப் பொலிவிழந்தே
மெய்யால் மனத்தால் சொலால்தீமை
செய்தே விளிந்திடாமல்
மெய்யான ஞானவாழ் வெய்துவிப்
பாய்வேத வித்தகனே. 67

மனநீரி னிற்காம மாதியா
மல்கிடும் பாசிநீக்காய்
தனதானி யங்களிற் பேராசை
யுற்றே தயங்கவைத்தாய்
இனுநீயெ னைச்சோத னைபுரிந்
தால்ஏழை என்னசெய்வேன்
நனவோடு தூக்கத் தொடுகன
வோடொளிர் நாயகனே. 68

தழைத்தோங்கும் ஓர்மரம் போலே
பருத்துத் தரைமிசையே
உழைக்காமல் ஊரைஏ மாற்றித்
திரிந்திங் குழன்றலுத்தேன்
பழுக்காத எண்ணுள்ள மீதுநீ
தோன்றிப் பவம்விலக்கிச்
செழிப்பான மெய்யின்பம் ஈந்துகாப்
பாய்ஞான தேசிகனே. 69

கருமமொன் றேனும் விதிமுறை
யாய்ச்செயேன் காசினிமேல்
தருமமொன் றேனும் புரிந்தறி
யேன்நின தாள்மிசையே
மருமலர் தூவிப் பணிகிலேன்
வீணே மடிதனன்றோ
அருமறை நாதனே மெய்ஞ்ஞானம்
நல்க அழைத்தருளே. 70

படித்த படிநடக் கக்கற்றி
லேன்நின் பதமலரை
அடுத்து வணங்கவும் கற்றிலேன்
அந்தோ அவனிமிசை
துடித்துக் குதித்துப் பிதற்றி
அலைந்து துயருழந்தேன்
அடித்துத் திருத்துவாய் என்றுளேன்
என்னைநீ ஆண்டருளே. 71

வேத முதல்வனே விண்ணோர்க்கு
நாதனே வேண்டுவோர்தம்
ஏதம் கெடுத்தாளும் எம்பெரு
மானைவிக் னேச்சுரனை
சாதல் பிறத்தல் இலாநிலை
தந்தருள் தற்பரனைக்
காத லொடுங்கசிந் தேகணீர்
மல்கிக் கருதுதுமே. 72

நம்பியாண் டார்நம்பி ஔவை
கபிலர் நலம்பெறவும்
நம்புமெய் கண்டார் இரெட்டியப்
பட்டி நகருதித்தோன்
அம்புவி மீதில் விரும்பிய
யாவும் அடைந்திடவும்
செம்பொருள் நல்கிடும் தேவனை
யேதுதி செய்குதுமே. 73

பைந்தமிழ்ப் பாடல்கட் கேற்ற
பரிசில் பரிந்தளிப்பான்
நொந்து வருந்துவோர் தம்மை
அருட்கணால் நோக்கிடுவான்
நைந்து கரையும் மனத்தார்க்
கிரங்கி நலம்புரிவான்
தொந்தி வயிற்றுக் கணபதி
யென்னும்ஓர் தூயவனே. 74

கயமுகச் சூரனைக் காய்ந்த
கடவுளைக் காசினிமேல்
தயவுடை சிந்தையில் தங்கும்
கருணை சமுத்திரத்தைப்
பயமெலாம் தீர்த்தருள் செய்யும்
பகவனைப் பண்புடனே
கயநீர் மலர்கொண்டு போற்றுவோர்
மெய்யொளி காணுவரே. 75

ஆறுமுகன் றன் துணைவனைத்
தூய அருளமுதைக்
கூறு மடியார் குறைதவிர்த்
தாளும் குணக்கடலைத்
தேறு முளங்கொண்ட சீரியர்
தேடும் திரவியத்தை
வேறு படாச்சிந்தை யோடே
துதிப்போர் விழுமியரே. 76

ஆரண மாகிநல் ஆகம
மாகி அருள்கொழிக்கும்
பூரண மாகிப் பழமையு
மாகிப் புதுமையுமாய்
நாரண னாகித் திசைமுக
னாகிய நாதவிந்தின்
காரண னும்ஒரு மூலப்
பொருளைக் கருதுதுமே. 77

காண்பவன் காட்சிகா ணப்படும்
வத்துவாய்க் காசினியோர்
சேணபயில் வானவர் சித்தர்வித்
யாதரர் கந்தருவர்
மாண்புடைக் கின்னரர் கிம்புரு
டர்பூதர் மாமுனிவோர்
பூண்பத பங்கய நாதனும்
போதனைப் போற்றுதுமே. 78

கற்றவர் உண்ணும் கனியைக்
கருதரி தாய்ஒளிரும்
நற்றவப் பேற்றைக் கருணைக்
கடலை நலம்தரற்கே
உற்றநற் றுயைத் தகப்பனை
ஒப்பிலாச் சற்குருவைக்
குற்றமெல் லாம்பொறுத் தாட்கொளும்
தேவைக் குறுகுதுமே. 79

பொன்போன்ற மேனிப் புராதன
னைப்பரி பூரணனை
என்போன்ற வர்க்கும் இருள்நீக்கி
இன்பருள் ஈச்சுரனை
அன்பூற்று கொண்ட அடியார்
மனத்துறை ஆண்டவனை
என்பூடு யாக்கையும் நெக்குரு
குப்படி ஏத்துதுமே. 80

ஒளியில் விளைந்த உயர்ஞான
 போதத்தை ஓங்குசித்தாம்
வெளியில் நடமிடும் வேதாந்த
 நாதனை விண்ணரசை
அளியில் கனிந்த கனியை
 அருந்தவத் தின்பயனைத்
தெளிவு தருந்தேனைச் சிந்தைசெய்
 வார்க்கொரு தீங்கிலையே. 81

வேதப் பொருளில் விளையும்
 விளைவினை விண்ணவர்சூழ்
பாதப் புணையினைப் பக்தர்கட்
 கீயும் பராபரனைப்
பேதப் படாவகை யால்நோக்கும்
 நல்லோர் பெறும்பொருளை
ஓதப் பெறும்வாய் உரைஏற்கும்
 எல்லா உலகமுமே.

உலையில் இரும்பன்ன மேனிய
 னைத்தினம் ஓதிடுமநற்
கலையின் பொருளாய்க் கருத்துள்
 இனித்துக் கரைதலிலா
தலகில் சுகவூற் றளித்திடும்
 கற்கண்டை அற்பனென்னை
உலகில் புரக்கும ஒருவனை
 ஏத்தும்நா உய்ந்திடுமே. 83

நன்றுடை யானை நலங்கொடுப்
 பானை நவிலருஞ்சொல்
ஒன்றுரைப் பானை உரைகடந்
 தானை உவந்துபவக்
குன்றழிப் பானைக் குணங்கடந்
 தானைக் குறையனைத்தும்
சென்றொழிப் பானைத் தினந்தொழு
 வோர்தாம் சிறந்தவரே. 84

எங்கும் இடையற வேநிறைந்
தோங்கி இலகொளியைப்
பொங்கும் திருவருள் நல்கும்
பொருளைப் புராதனத்தைத்
தங்கும் தயவாம் சமுத்திரத்
தைஞானத் தண்ணமுதை
எங்கள் இறையை இறைஞ்சுவோர்க்
குண்டோ இருவினையே? 85

விண்ணுக் கடங்கா வியன்பே
ரொளிகால் விழுப்பொருளைக்
கண்ணுக் கடங்காக் கவின்பெற்
றிலகும்முக் கட்கரும்பைப்
பண்ணுக் கடங்காத பாட்டின்
சுவையைப் பரவமுதை
எண்ணுக் கடங்கா இயல்புடை
ஏகனை ஏத்து நெஞ்சே. 86

ஐம்பெரும் பூதங்கட் காதிப்
பொருளினை அண்டினர்தம்
வெம்பவம் தீர்த்தருள் வேதாந்த
வத்துவை வித்தகர்தம்
செம்பொரு ளைக்கரு ணைக்கட
லைமுதல் தேவினைநீ
நம்பித் தொழுதிரு நெஞ்சே
உனக்கிது நல்வழியே. 87

பிரணவ மூர்த்தியை ஐங்கரத்
தேவைப் பெருந்தகையை
மரணமும் தோற்றமும் இல்லாநல்
வாழ்வை வழங்கிறையைக்
கரணமெல் லாங்கடந் துள்ளொளிர்
ஞானக் கதிரவனைச்
சரணடைந் தோர்களுக் குண்டோ
துயரம்நீ சாற்றுநெஞ்சே. 88

அங்கிங் கெனாத படியெங்கும்
ஓங்கும் அறிவொளியைத்
தங்கந் தனைநிகர் மேனிகொள்
மூர்த்தியைச் சாத்திரத்துள்
தங்கும் பொருளினைச் சாகா
வரந்தரும் தண்ணமுதை
மங்காச் சுகம்கொடுக் கும்கண
நாதனை வாழ்த்து நெஞ்சே. 89

அருளுருக் கொண்டொளிர் ஆனந்த
நாடனை அன்புடையோர்க்
கருமருந் தன்ன துணைவனை
ஐங்கரத் தண்ணலையுள்
உருகும னத்தொடும் தோத்தரிக்
கின்றவர்க் கொப்பிலதாம்
கருணைப்ர வாகம் பெருகிடும்
காண்நெஞ்ச மேயினியே. 90

வள்ளிக் குகந்த கணவன்
துணைவனை மாவுலகில்
எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும்
நிறைந்தொளிர் ஈச்சுரனை
உள்ளத்து ளேதோன்றி ஓங்கி
வளர்ந்த உயர்தருவில்
தெள்ளத் தெளிந்ததேன் சொட்டும்
கனியினைத் தேடுநெஞ்சே. 91

என்குரு நாதர்க்கு வாய்த்த
குருவை இறந்துபடும்
புன்குட லைமறந் தேயோகம்
நாடிடும் புண்ணியர்க்கு
நன்கருள் செய்திடும் ஞானக்
கொழுந்தினை நாடுதலே
என்கட னாகப் பணியெனக்
கோரி இறைஞ்சுநெஞ்சே. 92

ஔவையின் செந்தமிழ்ப் பாடற்
குகந்தே அருள்பொழியும்
செவ்விய ஐங்கரத் தேவைமெய்
யன்புசெய் சீரியர்க்கே
எவ்வர முங்கொடுத் தாண்டருள்
ஈசனை இத்தரையைத்
திவ்விய மாய்க்காத் தருள்பவன்
றன்னைநீ தேடுநெஞ்சே. 93

நீயே அருட்குரு நீயே
பெருந்திரு நேயமிக்கோய்
நீயே குலதெய்வம் நீயே
எனக்குற்ற நீதிமன்னன்
நீயே தனக்குவியல் நீயே
சுகப்புதையல் நித்தியனே
நீயே தவப்பே றெனக்கணே
சற்போற்று நெஞ்சகமே. 94

விண்ணுக் கரசைநால் வேதப்
பொருளைநல் வித்தகர்தம்
கண்ணுக் கினியானைக் காருண்ய
மூர்த்தியைக் காசினியில்
எண்ணித் துதிப்பவர்க் கின்னமு
தாய்உள் ளினிப்பவனை
நண்ணிப் பணிந்திரு நெஞ்சமே
அஃது தான் நல்வழியே. 95

வேதங் களுந்தொழு தேத்திடும்
அப்பனை விண்ணவர்முப்
போதும் பணிந்து புகழ்ந்திடும்
தேவனைப் பூரணனைப்
போதம் தரும்பர மானந்த
மூர்த்தியைப் போற்றி செய்துன்
பாதம் தவிரமற் றுண்டோ
துணையெனப் பற்று நெஞ்சே. 96

கருணை சொரூபனைக் கற்றவர்
போற்றிடும் கற்பகத்தை
அருள்நாடும் அன்பர்கட்
காராவமுதாம் அருந்துணையை
இருள்நீக்கி இன்பம் கொடுத்தாளும்
ஈசனை எம்மிறையை
அருணை தயத்திற்கு முன்விழித்
தன்பினாற் போற்று நெஞ்சே. 97

வேதாந்த மூர்த்தியை விண்ணவர்
கோனை விளங்குமேலாம்
நாதாந்த நாதனை நான்மறைச்
செம்பொருள் நல்குவோனைப்
போதாந்த வீட்டிற் பொலிந்திடும்
தேவனைப் புண்ணியர்சேர்
பாதாம் புயனைப் பணிந்தால்
பயனுண்டு பாவிநெஞ்சே. 98

விழுமியர் சேர்த்த திரவியத்
தைத்தூய வீடருளும்
பழமறை நாதனைப் பாவநா
சஞ்செயும் பண்ணவனைப்
பழமெனக் காயெனப் பூவென
ஆன பராபரனைச்
செழுமையே நல்கிடும் தேவைஉள்
நாடிநீ தேடுநெஞ்சே. 99

நீரினில் தண்மையைத் தீயினில்
வெம்மையை நீள்கடல்சூழ்
பாரினில் பல்பொருளை விளை
வித்திடும் பண்பினைப்பூந்
தாரில் மணத்தினைத் தேனில்
இனிப்பைத் தழைந்தெழுதண்
காரில் மழைத்துளி யைப்பே
ரொளியைக் கருதுநெஞ்சே. 100

அறமாய்ப் பொருளாகி இன்பமாய்
வீடாய் அருள்பெருக்கும்
திறமாய்ச் சிதாகாச சோதியாய்
ஞானத் திருவுருவாய்
புறமாய் அகமாய் அகப்புற
மாகிப் புறப்புறமாய்
நிறைபே ரழகாய் நிலவுவோ
னை நீ நினைகநெஞ்சே. 101

சத்தாகிச் சித்தாய்ச் சதானந்த
ரூபியாய்த் தாரணிமேல்
வித்தாகித் தூய வினைவாகி
ஞான விளக்குமாய்
சுத்தானந் தத்தைத் தருதுரி
யாதீதச் சோதியொளி
முத்தாய் விளங்கு முழுமுத
லைத்தொழு முத்தியுண்டே. 102

பார்க்கப் படும்பொருள் யாவுமா
யான பரம்பொருளை
யார்க்கும் முதல்வனை எம்பெரு
மானை இறைவனைச்சன்
மார்க்க நெறியினை நல்கும்
குருவை வழுத்திடுவாய்
நீர்க்குமி ழொத்த வுடல்சத
மல்ல நினைமனமே. 103

அட்டமா சித்திகள் தந்தருள்
வோனைமெய் யன்புடையோர்க்
கிட்டமாய்ச் செல்வம் அனைத்தும்
கொடுத்தருள் எம்மிறையைச்
சிட்டரெல் லாம்தொழும் தேவனைத்
தோத்திரம் செய்பவர்தம்
கட்டமெல் லாம்பறந் தேபோகும்
என்பதைக் காண்மனமே. 104

நூலருக் மங்கா ரணங்களுக்
கப்பால் துலங்கிடுவான்
ஞாலநீ ரங்கி பவனன்விண்
ணுகி நலம்தருவான்
காலமோர் மூன்றும் கடந்தொளிர்
மேலோன் கடைசிநடு
மூலமில் லாவோர் முதல்வனை
நாவே மொழிநிதமே. 105

ஆனை முகத்தனைப் பாசமொ
டங்குசம் ஏந்திஞனை
வானைப் பவனனை அங்கியை
நீரை மகிதலத்தைத்
தேனை இனிப்பைச் சுவையினை
விண்ணகத் தேவருக்கும்
கோனைக் குருவைப் புகழ்ந்துநா
வேதுதி கூறுகவே. 106

தாயும் தகப்பனும் தாரமும்
சுற்றமும் சாருநட்பும்
சேயும் பொருள்களும் கல்வியும்
கேள்வியும் செய்தொழிலும்
காயும் கனியும் அரும்பும்
மலரும் கரம்சிரமும்
வாயும் வயிறுமாய் வாய்த்தன
னே ஆகு வாகனனே. 107

ஆணுகிப் பெண்ணுய்இவ் வம்புவி
யில்வாழ் அனைத்துயிராய்
வாழ்நாள் முழுதுக்கும் யாவர்க்கும்
வாய்த்த வழித்துணையாய்க்
காணுத காட்சியைக் காட்டுமெய்ஞ்
ஞானக் கதிரவனுய்
நாள்நாளும் இன்பமே நல்குவான்
எங்கள்வி நாயகனே. 108

# கண்ணிகள்

அன்பைத் தருவாயோ ஆனந்த மீவாயோ
துன்பைத் தொலைப்பாயோ சொல்வாய் பராபரமே.

ஆதரவு வேறிவ் வவனியில்யான் கண்டறியேன்
நீதயவு செய்ய நினைப்பாய் பராபரமே.

இறந்து பிறந்துழலும் இத்துன்பம் தீரச்
சிறந்த பதநிழலில் சேர்ப்பாய் பராபரமே.

ஈரமிலா நெஞ்சனென எண்ணி விலக்காதுன்
சீரடியார் கூட்டத்திற் சேர்ப்பாய் பராபரமே.

உள்ளன்பி லாதுபொய்யால் ஊரையே மாற்றுமொரு
கள்ளனெனத் தள்ளாமற் காப்பாய் பராபரமே.

ஊணுக் கலையா துனைப்போற்ற வைத்தன்பால்
பேணி யருள்மழையைப் பெய்யாய் பராபரமே.

எண்ணற்ற எண்ணங்கள் எண்ணாமல் உன்பாதம்
நண்ணும் நெறியை நவில்வாய் பராபரமே.

ஏங்கி இடர்க்கடலுள் வாடும் எனக்குன்றன்
பூங்கழலே நல்ல புணைகாண் பராபரமே.

ஐந்து பகைவரெனை ஆட்டி வருத்துவதோ?
வந்தப் பகைவரைநீ மாய்ப்பாய் பராபரமே.

ஒன்றாய்ப் பலவானாய் வேறாய் உடனானாய்
என்றே உரைத்தார் இஃதென்னே பராபரமே!

ஓமென்னும் ஒன்றை உணர்ந்தோர்க் கெதும்விரைவில்
ஆமென்ற தேனே அருள்வாய் பராபரமே.

ஔவைக் கருள்பொழியும் அண்ணால்நின் நற்புகழைச்
செவ்வையாய்ப் பாடவருள் செய்வாய் பராபரமே.

கலைகளெலாம் காணாத காட்சியையே காணும்
நிலைஎனக்கு நல்க நினைப்பாய் பராபரமே.

ஙப்போல் எனைஎங் ஙனமோநீ ஆட்கொள்ள
இப்போ வரவே இசைவாய் பராபரமே.

சஞ்சலமி குந்து தமியேன் அழுகின்றேன்
அஞ்சேல் எனக்கூறி ஆள்வாய் பராபரமே.

ஞாலியென வீணாய் அலைந்து நலிந்தேன்
எமன்வருமுன் காக்க இசைவாய் பராபரமே.

டம்பமிகக் காட்டித் தருக்கித் திரியாமல்
உன்பதத்தை நாடவரு ளூட்டாய் பராபரமே.

ணகரம்போல் என்னுடலை நன்றாய் வணக்கி
அகவொளியை நல்கி யருள்வாய் பராபரமே.

தந்தைதாய் எல்லாம்நீ தானென்று நம்பியுள்ளேன்
அந்தமிலா இன்பம் அளிப்பாய் பராபரமே.

நன்மார்க்கம் நாடாமல் துன்மார்க்கம் நாடிவிட்டேன்
சன்மார்க்கந் தன்னைத் தருவாய் பராபரமே.

பழிபாவத் திற்கஞ்சேன் பாழானேன் நல்ல
வழியை யுணர்த்த வருவாய் பராபரமே.

மண்ணாசை பெண்ணாசை மாதர் மயலகற்றி
உள்நாடி நோக்க உணர்த்தாய் பராபரமே.

யந்திரம்போல் ஆடி இளைத்தேன் அருளெய்தும்
தந்திரத்தை அன்போடும் சாற்றாய் பராபரமே.

ரத்தினமாய் உள்ளே ரமிக்கும் உனையன்பால்
எத்தினமும் காணவரு ளீவாய் பராபரமே.

லலாடத்தி னுப்பண் இலங்கும் சுடரை
யலால்வேறு காட்டாம லாள்வாய் பராபரமே.

வழியறியா தேங்கி வருந்துமெனைப் பேணி
அழியாப்பே ரின்பம் அளிப்பாய் பராபரமே.

அழுக்கு கழகேநின் னருளை வழுத்திப்
பழகிச் சுகிக்கப் பணிப்பாய் பராபரமே.

அளவுரைக்க வொண்ணா அகண்டப் பொருளாய்
உளநின்னை யெய்தவழி உண்டோ பராபரமே?

அறம்பொருளா யின்பமுமாய் வீடாய் அகத்துள்
நிறைந்தொளிரு ஞான நிலையே பராபரமே.

அனவரத முன்பே ரருளை நினைந்து
மனமுருகச் செய்து மகிழ்வாய் பராபரமே.

# கீர்த்தனை

## 1

(பல்லவி)

என்றைக்குன் திருக்காட்சி தந்தருள் புரிவாயோ
ஏதும் யான் அறியேனே.

(அனுபல்லவி)

இன்றைக்கு நாளைக் கென்றே
என்வாழ்நாள் போகுதையோ! (என்

(சரணம்)

கன்றின் குரலைக் கேட்டுக்
கனைத்து வரும் பசுப்போல்
என்றன் மொழியேற் றென்முன்
இனிதுவந் தருள் வாயோ? (என்

காணும் வடிவம் எல்லாம்
கடவுள்நின் வடிவென்பார்
பூணும்மெய் யன்பில் லாத
பொய்யன் யான் அறிகிலேன் (என்

அன்பால் அடியார் களை
ஆண்டருள் நற்கருணை
என்பால் திரும்ப வேண்டும்
என்றேழை வேண்டுகின்றேன் (என்

இருள்சூழ் இருவினைகள்
எனைவிட் டகலு மாறே
அருள்சேர் ஒளிவ ழங்கி
ஆனந்த அமு தூட்டி (என்)

2

(பல்லவி)

நானெங்கு தேடுவேனையா?—உனை
நானெங்கு தேடுவேனையா?

(அனுபல்லவி)

மானபிமானங்கள்விடுத் தெங்கும்
தானனமே லோர்உளம் மேவும் உனை (நா)

(சரணம்)

குணக் கேடனைக் கொன்னே நாள்கழித்தேன்
கணமேனும்நின் காட்சி யருள்வாய்
அணுவளவுன் அருட்காட்சி நல்கின்
அடியேன் உய்வேன் அருளையனே (நா)

3

(பல்லவி)

பேரும் ஊரும் தெரியாப் பெருமானே உனைக் காணும்
பேறெனக் கருள் வாயோ? (பேரும்)

(சரணம்)

சீரும் சிறப்பும் மிக்க
திருவும், பல கலையும்
ஏரும் இளமை யும்வே
றெதுவும்கோ ராமல் நின்று (பேரும்)

நேரும் நிகழ்ச்சி யெல்லாம்
நின்விளை யாடல் என்றே
நீருண்ட மேகம் போன்ற
நின்னருளை வழுத்தி (பேரும்)

நீரும் நிலமும் காற்றும்
நெருப்பும்விண் ணும்போல் என்னுள்
போருண்ணும் புலன் களைப்
பொசுக்கிமௌ னத்துள் மூழ்கி (பேரும்)

பாரில் கசந்தி டும்வேப்
பங்காயும் பழுக் குங்கால்
சேரும் இனிப்பை என்றால்
சிறியேன் பாழாவ துண்டோ? (பேரும்)

4

(பல்லவி)

இன்பமே தருவாய்—உயர்
இன்பமே தருவாய்
இமையவர் முனி வரர் விழுமியர்
விழைவுறு பர சுக வமு தெனும் (இன்ப)

(சரணம்)

அன்பை மறந்திங்கே அற்பசு கத்தினை
இன்பமென் றேயெண்ணி ஏமாந்து போகாமல்
நின்பா தநி னைந்தே நிதம்
அன்போடுப ணிந்தே தத்திடும் (இன்ப)

ஆசைக் கடற்குள் அழுந்திப் பவபந்த
பாச வலையினுட் பட்டுழ லாமலே
மாசற்றுயர் நேசத்தொடு
பூசித்தருள் தேசுற்றிடும் (இன்ப)

5

(பல்லவி)

திருவருள் புரிவாயோ?—பரஞானம்
சிறியேற்குத் தருவாயோ?

(அனுபல்லவி)

இருளாட்சி தனைநீக்கி அருளாட்சி புரிவாயோ?
இருவரும் இரண்டற இணைந்திட அருள்வாயோ? (திரு)

(சரணம்)

பூத வுலகாழியில் போந்து வருந்துமென்னைப்
பாதப் புணையாலேநின் பாலிழுத் துக்கொள்வாயோ?
சோதனை கள்செய்யாமல் தூய்மை யளித்துமேலாம்
போதம் வழங்கியருட் போனகம் தருவாயோ? (திரு)

ஆயிரங் கோடிமுறை அவனியி லேபிறந்தும்
நீயிருக் குமிடத்தை நாடிட நினைந்திலேன்
மாயிரு ஞாலந்தன்னில் மன்னும் பொருளுளெல்லாம்
நீயிருக் கிருயென்னும் நிலையுணர்த் திடுவாயோ? (திரு)

6

(பல்லவி)

உனையே நம்பினேன் அருள் செய்வாயே

(அனுபல்லவி)

உலவாத இன்பம் கொடுத்தாளும் எந்தாய் (உனை)

(சரணம்)

கனியாத பொல்லாக் கல்மனத்தை நீராய்க்
கசிந்துருகச்செய் கருணா கரனே!
வினையாவும் நீக்கும் வித்தகனே மேலாம்
விண்ணவர்கள் போற்றும் வேத நாயகனே! (உனை)

எண்ணிலாப்பல் கோடி எண்ணமெல்லாம் எண்ணி
எந்தநேர மும்பே ராசைக்கோட்டை கட்டிக்
கண்ணிலாக் குருடன் போலநாள் கழித்தேன்
கருத்தைத் திருத்தும் கடன்நின தன்றோ? (உனை)

7

(பல்லவி)

எத்தனையோ வடிவாய் இலகும்நின் இயல்பினை
எவரும்கண் டறியார் ஐயா

(அனுபல்லவி)

வித்தும் முளைபயிரும் விளைவும் பயனுமாகி (எத்)

(சரணம்)

சித்தியாய்ப் புத்தியாய்ச்சச் சித்தாய் ஆனந்தமாகி
சத்தியாய்ச் சிவமாகிச் சாரும்விந் துநாதமாய்
பத்தியாய் ஞானமாகிப் பரிபக்கு வமுமாகி
முத்தியாய் யாவுமீயும் மூர்த்தியாய்ப் பொலிகின்றாய் (எத்)

அங்கிங் கெனாதபடி எங்கெங்கு மாய்நிறைந்தாய்
கங்கு கரையொன் றின்றிப் பொங்கிவ ழிந்துறைந்தாய்
தங்கு தடையற்றெழு துங்கக் கருணை தந்தாய்
தங்கத்தின் மாற்றறிவோர் இங்குன்மாற் றறிவாரோ?(எத்)

அன்பில்நீ முளைக்கின்றாய் இன்பங்கள் விளைக்கின்றாய்
துன்பங்கள் தொலைக்கின்றாய் தின்பண்டம் அளிக்கின்றாய்
அறிவுற அடுக்கின்றாய் செறிவுறத் திளைக்கின்றாய்
குறைவறக் கொடுக்கின்றாய் நிறைவுற நிலைக்கின்றாய்(எத்)

அருளில்நீ விழிக்கின்றாய் மருளினை மறுக்கின்றாய்
மிரளலைத் தடுக்கின்றாய் இருளினை எதிர்க்கின்றாய்
திரள்வினை தகர்க்கின்றாய் உருள்பிறப் பொழிக்கின்றாய்
பொருளினைப் புணர்க்கின்றாய் தெருளுறச் செழிக்கின்
றாய் (எத்)

8

(பல்லவி)

ஒருமுறை வருவாயோ?—மேலாம்
திருவருள் புரிவாயோ?

(அனுபல்லவி)

ஒருமுறை வருவாயோ திருவருள் புரிவாயோ
அருமறை முழங்கிடும் பெருமையை யுடையநீ (ஒருமுறை)

(சரணம்)

கருமக்கட் டையறுத்துத் தருமநெ றிசெலுத்திப்
பரமக ருணைசெய்யும் குருமணி யேஎண்ணில்லாத்
திருமுறை கள்வழுத்தும் நிருமல சொரூபனே
பிரமஞா னம்உணர்த்தி இருமைநல னும்தர (ஒருமுறை)

கண்ணும் கருத்தும்போலும் எண்ணும் எழுத்தும்
போலும்
விண்ணும் ஒலியும்போலும் மண்ணும் மணமும் போலும்
பண்ணும் பாடலும்போலும் நண்ணும் நீயும்நா னுமாய்
உண்ணிறை யன்பால் ஒன்ற எண்ணும்இத் தருணத்தே
(ஒருமுறை)

கணப திதுதி பாடுவோம்
  கருணை யொளியை நாடுவோம்
கணிரெ மாநனி கழ லொலிதரு
  கடிம லர்தொழு தாடுவோம்

மணம லர்கொடு பூசிப்போம்
  மருவு மன்பினால் நேசிப்போம்
மனமு ருகியே தின மழு தவன்
  மாண ருளினை யாசிப்போம்

உணவு கொடுநி வேதிப்போம்
  உண்மை யுணர வாதிப்போம்
உனத ருள்தர இனி மறுப்பையேல்
  உயிர்நி லாதெனச் சாதிப்போம்

கணமும் மறந்தே இருந்திடோம்
  காலம் சிறிதும் இழந்திடோம்
கணவ னைத்தொழும் குல மகளெனக்
  கயமு கவனை இறைஞ்சுவோம் (கண)

(வேறு)

ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி ஓம்
ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி ஓம்

ஓங்குநன்மறை ஆகமங்களும்
  ஓதிடும்பொருளே
பாங்கொடுன் திருப் பாதபங்கயம் பரவிடற்கருளே (ஓம்)

ஆக்கல் அளித்தல் அழித்தல் மறைத்தல்
  அருளல் செய்பவனே
போக்கு வரவில் லாநிலையினில் புக அருள்பவனே (ஓம்)

வாக்கும் மனமும் செயலும் தூயவாய்
  வயங்கச் செய்தருள் வாய்
நோக்கம் உள்முக மாக்கியேநடு நுதலொளி யருள்வாய்
(ஓம்)

சூழ்பவம் விலக் கித்திருவருள்
  சொரிந்திட வருவாய்
ஏழ்வகைப்பிற விக்கடல்கடத் திடஎழுந்தருள்வாய் (ஓம்)

## "மற்றுப் பற்றெனக் கின்றி" என்ற பண்

அன்பர்கட்கெளி வந்தருள்செயும்
ஐயனே அருள் மெய்யனே
துன்பம் யாவும அகற்ற மூண்டெழு
சோதியே நல்ல நீதியே
மன்பதைக்கு நலம் விளைத்திடும்
மாட்சியே அருளாட்சியே
உன்பதாம்புய நீழல்யானெய்தி
உய்யவே அருள் செய்கவே. 1

எண்ணெடேயெழுத் தாயிலங்கிடும்
எந்தையே அருள் தந்தையே
எண்ணிலாவுல கும்புரந்தருள்
ஈசனே பவ நாசனே
கண்ணுமாய்க்கண் மணியுமாயொளிர்
காட்சியே ஜீவ சாட்சியே
உண்ணுமாரமுதே இனி யானும்
உய்யவே அருள் செய்கவே. 2

அப்புமண் அனல் வாயுவிண்ணென
ஆனவா உயர் வானவா
செப்பருமறை நான்கும் கூறருட்
சீர்த்தியே ஞான மூர்த்தியே
ஒப்புயர்வின்றி எங்குமேநிறை
உண்மையே அருள் திண்மையே
இப்புவியிற்சன் மார்க்கந் தன்னில்யான்
ஏகவே அருள் ஈகவே. 3

இரவுடன்பக லற்றிலங்குவாய்
என்றும் எங்கும் துலங்குவாய்
பரவுவோர்க்கரு ளீவழங்குவாய்
பாவம் மாயமுழங்குவாய்

கரவிலா வுளத் தன்பர்க்கே உருக்
காட்டுவாய் அமு தூட்டுவாய்
திருவிலா என்றன் நாவில்ஓர்மொழி
தீட்டுவாய் அன்பை நாட்டுவாய். 4

நீணிலத்தெல்லாம் காட்டுவோனென
மேவுவாய் நேருற் றேவுவாய்
காணும்யாவும் எனத்திகழுவாய்
காண்போ னாகிப் புகழுவாய்
ஆணினோடுபெண் ணாயொளிருவாய்
அல்ல வாயும் மிளிருவாய்
தாள்நினைந்தருள் எய்தஓர்வரம்
தருகவே என்முன் வருகவே. 5

உத்தமர்உளத் தேஅமுதென
ஊறுவாய் உண்மை கூறுவாய்
சித்தசுத்தியி லாதவர்களைச்
சீறுவாய் பவம் நூறுவாய்
முத்தருள்மூலத் தீயெனமுன்பு
மூண்டவா உனை வேண்டுவேன்
செத்தவன்போல யான்உன்சீர் எண்ணித்
திரியவே அருள் புரிகவே. 6

எங்கும் மேவினை யாவும் ஆயினை
என்றுன் அன்பர்ந வின்றதால்
எங்குதேடுவ தென்றறிகிலன்
இங்கென என்னுள் தங்குவாய்
எங்கும் யாவரும் எய்துதற்கொணா
இன்பமே அருள் அன்பனே
எங்கும் யாவர்க்கும் இன்பமேதரும்
ஈசனே சிதா காசனே. 7

மங்கள மென்போம்—எங்கள் கணேசர்க்கு
மங்கள மென்போம்.

அங்குமிங்கு மெங்கும் தங்கிநின்றி லங்கும்
துங்கவிக்கி னேசர் எங்கள் நாயகர்க்கு (மங்க)

பொங்கும் மங்களமே பொலியச் செய்பவர்க்கு
தங்கம் போன்ற மேனி சாரு மைங்கரர்க்கு
சங்கடந்தரும் வினைக்கடல் கடத்தும்
வங்கமாகி யிங்கே வந்தருள் நாதர்க்கு (மங்க)

கட்டம்யாவும் நீக்கும் கருணையாளர் எங்கள்
இட்டதெய்வ மாகி இலகுமிறை வர்க்கு
சட்டமனபர் கட்குச் சதுருடன் வகுத்த
ரெட்டைப்பட்டி ஸ்வாமிக் கின்பமருள் வோர்க்கு(மங்க)

[வேறு]

அங்குச பாசருக்கு மங்களம்
ஆங்கரக் கடவுளுக்கு மங்களம்
எங்கும் நிறைந்தவர்க்கு மங்களம்
எங்கள் இறைவருக்கு மங்களம்.

தேவர் கணபதிக்கு மங்களம்
[illegible] முதல்வருக்கு மங்களம்
[illegible] படைப்பவர்க்கு மங்களம்
[illegible] தொலைப்பவர்க்கு மங்களம்.

நா[illegible]த நாயகர்க்கு மங்களம்
நால்வாய்முக் கண்ணருக்கு மங்களம்
வேல்வாணர் சோதரர்க்கு மங்களம்
நல்வாச கத்துளோர்க்கு மங்களம்.

[illegible] தவிப்பவர்க்கு மங்களம்
[illegible]ானம் புகல்பவர்க்கு மங்களம்
[illegible] தருபவர்க்கு மங்களம்
[illegible] நாடருக்கு மங்களம்.

# அன்பர்கள் சேருக!

★

உலகிற் சிறந்த மானிடப் பி
படைத்த நாம் பிறவிப்பயனுகிய
நிலையையெய்தவேண்டியதுமுதற்கடன
வந்த வேலையை மறந்து எந்த வேலை
செய்தல் கூடாது என்று எத்தனை
யோர்கள் எடுத்துரைத்துள்ளனர்.
மனம் அருள்நெறியில் ஈடுபட அவாவுவ

மனதை நல்வழியில் திருப்பி
நெறிக்கு அடிகோலுவது "சத்சங்கம்"
தான் என்பது ஆன்ருேர் துணிபு.

ஆதலால் அன்பர்களும், அடியா ...ம்
சங்கத்தில் அங்கத்தினராகச்சேர்ந்து அருட்
பேறு பெற்றுய்யக்கோரிக்கை.

ஆண்டு கட்டணம் ரூ. 1

ஆயுள் கட்டணம் ரூ. 0

விவரங்கட்கு:—

செயலர்,

இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கம்,

[பதிவு: 2-11-'45] காஞ்சி

# இலவச மாணவர் விடுதி

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" —குறள்

அன்புமிக்குடையீர்!

பாரதநாட்டின் இளம்பயிர்களான மாணவர் பலர்க்கும் கல்விச்செல்வத்தை வழங்க வேண்டியது நாட்டு மக்களின் கடமையாகும். எண்ணிறந்த மக்கள் பெற்றோர் உற்றாரின்றி, உண்டி உடையின்றி, படிக்க வசதியின்றி ஆதரவற்றுத் தவிக்கிறார்கள். இத்தகைய ஏழைமாணவர்கட்கு உணவு, உறைவிடம், உடை, சுவடிகள், முதலிய உதவி, நல்லொழுக்கத்திற் பழக்கி, கல்வியறிவூட்டுவது மாபெரும் புண்ணியமாகும். இத்துறையில் 1—7—1946ல் தொடங்கி, காஞ்சியில் நடந்துவரும் இவ் இலவச மாணவர் விடுதி நன்கு வளர்ச்சியுற அன்பர்கள் மனமுவந்து ஆதரவளிக்கக் கோரிக்கை.

விவரங்கட்கு:—

காப்பாளர்,
இரெட்டியப்பட்டி அடிகளார் இலவச மாணவர் விடுதி,
காஞ்சிபுரம்.

ஸ்ரீ நிலயம் அச்சகம் காஞ்சி. 843-5-1000